Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-27 | 13-10-2004 | புதன்கிழமை | ஓசை -238




# மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாவிடில் யுத்தநிறுத்தத்தை அது பாதிக்கலாம்!

## இல.விஜயத்தை முடித்து நாடு திரும்புகையில் சுவிஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதான பேச்சுக்கள் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படா விட்டால் அது யுத்த நிறுத்தத்தைப் பாதிக்கலாம் . அல்லது அதற்கு அபாயத்தை விளைவிக்கலாமென சுவிற்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் மிக்கெலின் காமிரே தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவர் நாடு திரும்பும் முன்னர் நேற்றுப் பத்திரிகையாளரைச் சந்தித்தவேளை மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

புலிகளுக்கும் அரசிற்குமிடையிலான பரஸ்பர நம்பிக்கையீனமே பேச்சுக்கள் ஆரம்பமாவதற்குத் தடையாகவுள்ள பிரதான காரணியென்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் யுத்தம் ஓய்ந்திருப்பது நல்லவிடயம் எனவும் புலிகளும்- அரசும் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஆர்வமாக இருப்பது சந்தோசத்தைத் தரும் விடயமெனத் தெரிவித்தார்.

அத்துடன் நான் கொழும்பிற்கு வருவதற்கு முன்னர் சுவிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு–புலிகள் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க இந்தியா உதவ வேண்டும்

### -ரணில் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் தடைப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா உதவவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள ரணில் நேற்றுக் காலை இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது அலுவலகத்தில் சந்தித்தவேளை மேற்கண்டவாறு கோரியுள்ளார். அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:-

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய அரசு அளித்துவருகின்ற ஆதரவைத் தொடர வேண்டுமென மன்மோகன்சிங்கிடம் கூறியதாகவும், தமது ஆட்சியின் போது புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் சமூகமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் இப் பேச்சுவார்த்தையைத் தொடராவிட்டால் போர் நிறுத்தம் அர்த்தமற்றதாகிவிடும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் விழிப்புணர்வைப் பெறும் இனத்தாலேயே —தனது உரிமைகளை நிலைநாட்ட முடியும்—

### –யாழ். சென்ற ஜேர்மன் அரசியல் நிபுணர்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்கள் அரசியலில் நேரடியாக பங்குபெறுவதன் மூலமே தமது பிரதேசத்திற்கான சமூக, பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்து கொள்ள முடியும்.

இவ்வாறு நேற்று யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த அரசியல் நிபுணரும் பேராசிரியருமான ஹறோலஸ்ரீன் (Carolesteen) தெரிவித்துள்ளார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசறிவியல் டிப்ளோமா கற்கை நெறியின் ஆரம்ப விழாவிற்காக நேற்று யாழ். வந்த இவர் சம்பிரதாய பூர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல்குழுவினர் நெதர்லாந்து இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேச்சு

### -தற்போதைய அரசியல் சூழல் வடக்கு-கிழக்கு நிலைகுறித்து விளக்கம்

ஐரோப்பாவிற்கு விஜயம் செய்துள்ள தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து இராஜதந்திரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன் போது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை சமாதான முன்னெடுப்புகள் வட-கிழக்கு அபிவிருத்தி மற்றும் கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 19 ஆம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிற்குச் செல்லவுள்ளனர்.

## நாட்டுப்பற்றாளர் இருவர் வீரச்சாவு

31-03-2004 அன்று தேசத்துரோகி கருணா குழுவினரால் கைது செய்யப்பட்டு வஞ்சகத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கறுவல்த்தம்பி-கணேசலிங்கம், தம்பலவத்தை மண்டூர் அம்பாறைஎன்பவரே வீரச்சாவடைந்தவராவார்

11-04-2004 அன்று தேசத்துரோகி கருணா குழுவினரால் கைது செய்யப்பட்டு வஞ்சகத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டு நாட்டுப்பற்றாளர் ஒருவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவிலிருந்து கடனுக்கு டாங்கிகள் கொள்வனவுசெய்ய சந்திரிகா அனுமதி

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு சுமார் இரண்டாயிரம் கோடி ரூபா செலவில் 95 யுத்த டாங்கிகள் கொள்வனவு செய்யவுள்ளதாக தெரியவருகிறது.

தற்போதைய நிலையில் யுத்த டாங்கிகளுக்கு இவ்வளவு நிதியை ஒதுக்கீடு செய்வது கடினமானது என்பதால் இதற்காகச் சீனாவிடம் இருந்து கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யுமாறு சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மகனைச் சுட்டுக்கொன்ற தந்தை காவல்துறையால் கைது

(மன்னார்)

தந்தைக்கும் மகனுக்குமிடையே ஏற்பட்ட தகராறின் காரணமாக பண்டிவிரிச்சானைச் சேர்ந்த கணித ஆசிரிய ஆலோசகர் யூலியட் எப்பொட்டை (வயது-33) தந்தை கட்டுத்துப்பாக் கியினால் சுட்டுக்கொன்றுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம் பெற்றது. கொலை செய்யப்பட்டவர் கிணற்றில் குளித்துக் கொண்டிருக்கும் வேளையே தந்தையால் சுடப்பட்டுள்ளார். கொலையாளியான குறித்த நபரின் தந்தையை ஆண்டான் குளம் காவல் துறையினர் கைது செய்து வைத்துள்ளனர். (மி)

## இல.இனப்பிரச்சினையில் புதிய இந்.அரசின் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை


### நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசின் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை. தற்போதைய காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு முன்னைய பா.ஜ.தலைமையிலான ஆட்சிக்கால வெளியுறவுக்கொள்கையையே தொடர்கிறதென நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள அவர் அங்கு இந்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜின் சிங், வெளியுறவு அமைச்சர், தேசிய பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்த பின்னர் பி.பி.ஸி தமிழோசைக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் ரணில் உடனான சந்திப்பின் போது இலங்கையில் தற் போதைய நிலைமை தொடர்பாக அவரின் கருத்துக்களைக் கேட்டறிந்தேன் மேலும் சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் நகரில் பேரணியுடன் தொடங்கிய லெப்.கேணல் விக்ரர் நினைவு நிகழ்வு




(மன்னார்)

லெப்டினன்ட் கேணல் விக்ரர் அவர்களின் 18ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு மன்னாரில் நேற்று உணர்வு பூர்வமாக நடைபெற்றது. பிற்பகல் 2.00 மணிக்கு விக்ரரின் திருவுருவப்படத்தைத் தாங்கிய பேரணி மன்னார் நகரத்திலிருந்து மன்னார் பொது விளையாட்டரங்கைச் சென்றடைந்தது.

அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்ற பின்னர் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் இதன் பின்னர் தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்களின் இன்னிசை நிகழ்வும் இடம் பெற்றது. (மி)

## வரிவிளம்பரம்


### தவறிவிட்டது

பொன்னம்பலம் குணசந்திரி என்பவருடைய கைபாக் ஒன்று தவறிவிட்டது. அதனுள் இரண்டு கணினிப் புத்தகமும், இரண்டு கணினி அனுமதியட்டையும், ஒரு கொப்பியும், 2000 ரூபா பணமும் உள்ளது. அதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சியிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் (I.C.R.C.) கொடுத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றார். கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். தகவல் பொ. குணசந்திரி. (5159)

### தவறிவிட்டது

நவரத்தினம் சுரேஸ்குமார் ஆகிய எனது கைப்பை ஒன்று ஆனையிறவிற்கும், பரந்தனுக்குமிடையில் தவறிவிட்டது. (115-3953 மோட்டார் சைக்கில் புத்தகம் உட்பட) கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது பரந்தன் சந்தியில் உள்ள தென்றல் பல்பொருள் வாணிபத்தில் ஒப்படைக்கவும். தகவல் ந. சுரேஸ் குமார். (5178)


## சுழற்சிமுறையில் கடன்

(வடமராட்சி கிழக்கு)

யு.என்.டி.பீ நிறுவனமும், நிகொட் நிறுவனமும் இணைந்து வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க உறுப்பினருக்கு சுழற்சி முறைக் கடனை வழங்கிவருகிறது. அதன்படி அண்மையில் உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பயனாளிகளுக்கு வெளியிறைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (11)

## கடன் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுடான் பிரதேசத்தின் பண்டாரவன்னிக் கிராமத்தில் உள்ள எழிலரசி சேமிப்பு குழுவில் உள்ள எட்டுப் பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் வழங்கல் பண்டாரவன்னி முன்பள்ளியில் வைத்து நேற்று முன்தினம் கெயர் நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் 08பயனாளிகளுக்கு தலா 5000/= வீதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு எழிலரசி சேமிப்புக் குழுவின் தலைவர் ஜீ.ராதிகா தலைமையில் நடைபெற்றது.

# ம.உ.ஆணைக்குழு அதிகாரி தாக்கப்பட்டது குறித்து

# அடையாள அணிவகுப்பு நடத்த நீதவான் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிசாரால தாக் கப்பட்டதாக செய்யப்பட்ட முறைபபாட்டின் பேரில் அடையாள அணி வகுப்பொன்றை இன்று புதன்கிழமை நடத்த யாழ்.நீதவான் இ.த. விக்கினராஜா உத்தர விட்டுள்ளார்.

கொழும்பு-பொலிஸ் தலைமையக விசேட புலனாய்வுப்பிரிவு உதவிப்பொறுப்பதிகாரி அ.பத்ம சிறி முனசிங்கவினால் நீதிமன்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் அடிப்படையிலேயே இவ் அடையாள அணிவகுப்பு இடம் பெறவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக இணைப் பதிகாரி ஆர்.பி றுவான் சந்திர சேகர கடந்த மாதம் 27 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் தாக்கப்பட்டமை தொடர்பாக செய்யப்பட்டிருந்த முறைப்பாட்டின் அடிப்படையில் 46 பொலிசார் இன்று இடம்பெறவுள்ள அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.வான குருவிடம் இவர்கள் 46 பேரையும் மூடப்பட்ட வாகனத்தில் இன்று காலை யாழ்.நீதிமன்றில் வைத்துச் சிறைச்சாலை அத்தியட்சகரால் கையளிக்க உத்தரவிட்டுள்ள நீதவான் மேலதிக சிறைச்சாலை காவலர்களைப் பணியில் ஈடுபடுத்தவும் பணித்துள்ளார்.

தடவை ஒன்றிற்கு இரு பொலிசார் என்ற அடிப்படையில் 23 தடவைகள் இடம்பெறும் இவ் அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்த 322 பேரை மேலதிகமாக ஆஜர்படுத்தவும் நீதவான் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.வான குருவிற்கு பணித்துள்ளார். இதே வேளை ஆணைக்குழு இணைப் பதிகாரி ஆர்.பி றுவான் சந்திர சேகரவையும் இன்று காலை 9.00 மணிக்கு நீதிமன்றில் ஆஜராக நீதவான் உத்தரவிட்டுள்ளார். (27)

## மானியம்

(ஒட்டுசுட்டான்)

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள ஆறுமுகத்தான் குள கிராம விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கெயர் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தின் முல்லை மாவட்டத்தினரால் மானியப் பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் 22 விவசாயிளுக்கு நெற் செய்கைக்கான உள்ளீடுகளும், 15 விவசாயிகளுக்கு வீட்டுத் தோட்டத்திற்கான உள்ளீடுகளும், 21 குடும்பங்களுக்கு மலசல கூடம் கட்டுவதற்கான மூலப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது. (05)

# அக்கராயன் சுற்றயல் கூறு வைத்தியசாலையில் மூன்று மாதங்களில் 10101 பேர் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அக்கராயன் சுற்றயல் கூறு வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களில் 10101 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் கடந்த ஆடிமாதத்தில் 2689 நோயாளர்களும், ஆவணி மாதத்தில் 3456 நோயாளர்களும், புரட்டாதி மாதத்தில் 3916 நோயாளர்களும் சிகிச்சைப்பெற்றுள்ளனர்.

இவர்களில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 325 நோயாளர்கள் நோயாளர் விடுதியில் தங்கி சிகிச்சைப் பெற்றுள்ளதாக வைத்தியசாலை குறிப்பேட்டின் மூலம் தெரியவந்துள்ளது. (சோ)

# வாசிப்பு மாதத்தையொட்டி புதுக்குடியிருப்பில் கருத்தரங்கு

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாதம் தொடர்பான கருத்தரங்கு பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் விரிவுரைகளை படைப்பாளர் போராளி தமிழ்க்கவி, வணபிதா. எஸ்.ஈ றெஜினோல்ட் (அ.ம.தி அன்னை இல்ல உளவளத்துறை நிலையம் கிளிநொச்சி), நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன், புலிகளின் குரல்வானொலியைச் சேர்ந்த ஆதிலட்சுமி சிவகுமார், மொழிப்பெயர்ப்புப் பிரிவு அருளாளன், கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பு.சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

நன்றியுரையினை புதுக்குடியிருப்புப் பிரதேச சபைப்பணியாளர் செல்வி தா.தேவஜதிஜினி வழங்கினார்.

## உண்டியல் உடைத்து பணம் திருட்டு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரர் கோவில் உண்டியல் உடைத்துப் பணம் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

களஞ்சிய அறையின் மேல் ஏறி கூரை ஓடுகளை பிரித்து உள் இறங்கி அதில் உள்ள காசு இரும்புப் பெட்டியைத் தூக்க முயற்சித்து, இயலாமையையடுத்து உண்டியலை உடைத்து குறிப்பிட்டளவு பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (05)

—துரித கற்றல் செயற்பாட்டால்—

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவன்

(அலுவலக செய்தியாளர்)

துரித கற்றல் செயற்பாட்டின் மூலம் கற்கை நெறியினை மேற்கொண்ட மாணவன் ஒருவன் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளான்.

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவனான செல்வன் எஸ்.ஸ்ரீபன் என்ற மாணவனே 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை (05ஆம்) ஆண்டில் தோற்றி 126 வெட்டுப் புள்ளிகளைப் பெற்று புலமைப்பரீட்சையில் சித்தியெய்தியவராவார்.

இம்மாணவன் குறித்து முன்னால் கல்லூரி அதிபரும் கிளி/கோட்டக்கல்வி அதிகாரியுமான திருமதி. அரியரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில்; மேற்படி மாணவன் 1999 ஆம் ஆண்டு ஸ்கந்தபுரத்தில் கல்லூரி இயங்கி வந்த பொழுது தரம் 1இல் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றுவருகையில் கிளிநொச்சியில் மீளக் குடியமர்வுகள் இடம் பெற்ற வேளையில் கல்லூரிக்கு சமூகமளிக்காது கல்வியினை நிறுத்திக்கொண்டான். மீண்டும் 2001 ஆம் ஆண்டு கல்லூரியில் தரம் ஒன்றில் இணைந்து மூன்று மாத கடின கற்பித்தல் மூலம் தரம் மூன்றில் இணைக்கப்பெற்று துரிதகற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்தி மாலை நேரவகுப்பில் சேர்த்து ஆசிரியர்களின் விடாமுயற்சியின் பயனாக கற்பித்தல் இடம் பெற்றுவந்தது. இருப்பினும் மேற்படி மாணவன் வழமையான வகுப்பாசிரியரிடமே கற்கையினை மேற்கொண்டு வந்தான். வகுப்பாசிரியரின் உத்தரவில் துரித கற்றல் செயற்பாடு, மேலதிக கற்றல் பயிற்சியாவற்றிற்கும் ஈடுகொடுத்து 2004 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை தரம் 5இல் தோற்றி சித்திபெற்றுள்ளான். இதற்குத் துரிதகற்றல் செயற்பாடே காரணமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்ததுடன், தற்போது மேற்படி மாணவன் ஏனைய சக மாணவர்கள் போல் கற்றலில் தடையேதும் இல்லாது கற்கை நெறியினை சிறப்பாக மேற கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (சோ)

# முல்லையில் 3 நாட்களாக தபால்கள் தேக்கம்

முல்லைத்தீவு தபால் நிலையத்தில் மூன்று நாட்கள் வவுனியா செல்லும் தபால்கள் தேங்கியுள்ளது. இதனால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அவசரமான கடிதங்கள் முதல் வேலை வாய்ப்புக்கு விண்ணப்பித்த விண்ணப்பங்கள் வரை அனைத்தும் தேங்கி நிற்கின்றன. தபால் கொண்டு செல்லாததிற்குக் காரணம் வாகனம் பழுதடைந்துள்ளதே எனத் தெரிவிக்கப்படுகிறது. (20)


## குமரபுரம்-காஞ்சிபுரம்கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

எதிர்வரும் **14.10.2004** வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் குமரபுரம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் சங்கத்தின் புதிய நிர்வாகசபையினைரைத் தெரிவுசெய்தலும், பொதுக்கூட்டமும் நடைபெறும். சங்க உறுப்பினர்களைத் தவறாது கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்** (5176) **செயலாளர்**

## கால்நடை பகிரங்க ஏலவிற்பனை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் 08-10-2004 அன்று கட்டாக்காலிகளாக திரிந்து பயிரழிவுகளை ஏற்படுத்திய கால்நடைகள் பிடிக்கப்பட்டுள்ளது. இக்கால் நடைகளை உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் எதிர்வரும் 16-10-2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டச் செயலகத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

கால் நடைகளின் விபரம் பின்வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| பசு | நாம்பன் | குறி | நிறம் | வயது |
| பசு | - | - | வெள்ளை | 2 1/2 |
| - | நாம்பன் | நி | செங்காரி | 2 |
| பசு | - | - | சிவப்பு | 2 |
| பசு | - | 498அ.மி | கழுகன் | 4 |
| பசு | - | - | கறுப்பு | 1 |
| பசு | - | - | சிவப்பு | 2 |
| பசு | - | - | சிவப்பு | 1 1/2 |

(5177) **த.பொ.மே. நிறுவனம், கிளிநொச்சி**

## உதைபந்தாட்டப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

ஸ்கந்தபுரம் "ஸ்கந்தா" விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் இராமநாதர் பசுபதி, அமரர் பசுபதி செந்தூரன் ஞாபகார்த்தமான பதினொருபேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியை எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமையினால் வன்னி மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. ஒரு கழகத்தில் இருந்து எத்தனை அணிகளும் பங்குபற்றலாம்.

* விண்ணப்ப முடிவுத் திகதி:- 18-10-2004
* விண்ணப்பக் கட்டணம்:-ரூ 300.00
* விண்ணப்பங்கள் பதிவு செய்யும் இடங்கள்:-
* சணா சிகை அலங்கரிப்பு நிலையம் ஸ்கந்தபுரம்,
* யாழ். ஜெனா தையலகம், கமல் திரையரங்கு அருகாமை, பிரதான வீதி, கனகபுரம்.

குறிப்பு :- விண்ணப்பங்களை தாமதிக்காமல் அனுப்பி வைக்கவும்.

(5180)

**நிர்வாகம், ஸ்கந்தா வி.கழகம்**

# ரம்ஸ்பீல்ட் -கூட்டுப்படை அதிகாரிகள் ஈ-ராக் நிலைமை குறித்து ஆலோசனை

அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கின் கூட்டுப் படைகளின் உயரதிகாரிகளைச் சந்தித்து ஈராக் விவகாரம் குறித்து விவாதித்துள்ளார்.

இதன் போது சுனி முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கெதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றிக் குறிப்பிட்டார்.

அடுத்த வருடம் சனவரி மாதம் ஈராக்கில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதன்போது மோதல்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், இதனால் கூட்டுப்படையினரை உசார்நிலையில் இருக்கும் படி உத்தரவிட்டதுடன் ஈராக் கிலுள்ள கூட்டுப்படையின் எண்ணிக் கையைக் குறைக்க முடியும் என்று தான் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# லிபியாவுக்கெதிரான ஆயுதத் தடையை ஐரோப்பிய யூனியன் விலக்கிக் கொண்டது

## வெளியுறவு அமைச்சர்கள் தீர்மானம்

1986 ஆம் ஆண்டு முதல் லிபியாவிற்கெதிரான அமுலிலுள்ள ஆயுதத் தடைகளை ஐரோப்பிய யூனியன் விலக்கியுள்ளது.

பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை கேணல் குவாடோ கைவிட்டதையடுத்து ஐரோப்பிய யூனியனின் வெளியுறவு அமைச்சர்கள் இம் முடிவை எடுத்துள்ளனர். ஆயுதத்தடைகளை நீக்குவதற்கு தன்னிடம் கூறப்பட்ட அனைத்தையும் லிபியா செய்வதாக ஐரோப்பிய யூனியனின் 25 உறுப்பினர் நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

# ஆயுதங்களை ஒப்படைக்க கெரில்லாக்கள் தயார்

# பிரதியீடாக நிதி வழங்க அமெரிக்கா சம்மதம்



பாக்தாத்தின் அயல் நகரமான சதர் நகரில் மதகுரு முக்ராடா அல்சதாரின் படம் அலங்கரிக்கும் வீடொன்றைக் கடந்து தனது பிள்ளைகளுடன் செல்லும் ஈராக்கிய பெண்மணியொருவர்.

(வோஷிங்டன்)

**ஈராக்கின் சியாமுஸ்லிம் இயக்கத்தலைவர் முக்ததா அல்சதாரின் ஆதரவாளர்கள் தமது ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்துள்ளனர். அமெரிக்க அதிகாரிகளுக்கும் ஈராக் பிரிவினைவாத கெரில்லாக் களுக்கும் இடையிலானஉடன்படிக்கையில் இணங்கிக்கொள்ளப்பட்ட மன்னிப்புக் காலத்தின் போது ஆயுத ஒப்படைப்புக்கு பிரதியுபகாரமாக நிதியை வழங்க அமெரிக்கா சம்மதித்துள்ளது.**

கடந்த 6 மாதங்களாக ஈராக்கிய பிரிவினை வாதிகளுக் கும் அமெரிக்கப் படையினருக்குமிடையே இடம் பெற்ற மோதலில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந் நிலையில் இப்போதைய இணக்கப்பாட்டிற்கு அமெரிக்கப் படையும் அல்சதார் ஆதரவாளர்களும் முன்வந்துள்ளனர். ரொக்கெட் குண்டுகள், கனரக ஆயுதங்கள், மற்றும் புதிய நிலக்கண்ணி வெடிகள் என்பவற்றை ஒப்படைக்க அல்சதாரின் குழுவினர் இணங்கியுள்ளனர்.

ஈராக் பொலிசாரை விட ஆயுத வலிமையில் அல்சதாரின் ஆதரவாளர்கள் மிகவும் உயர்ந்த நிலையிலிருப்பதாக ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களைப் பார்வையிட்ட அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களை ஒப்படைக்க அல்சாபிதரின் ஆதரவாளர்கள் முன்வந்ததையடுத்து பாக்தாத் நகரம் விமானக்குண்டு வீச்சுக்களோ வன்முறைகளோ இன்றி அமைதியாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதங்களை ஒப்படைப் போருக்குத் தேவையான நிதியை வழங்கவும் ஈராக்கிய நகரங்களை துரித கதியில் அபிவிருத்தி செய்வதற்கும் அமெரிக்கப் படைகள் இணங்கியதையடுத்து இந்த அமைதி நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனடிப்படையில் கனரக இயந்திரத்துப்பாக்கிகளுக்கு 1000 அமெரிக்க டொலர்களும், ரொக்கெட் குண்டுகளுக்கு 360 அமெரிக்க டொலர்களும் வழங்கப் படுகின்றது. எனினும் இந்த நிதியைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் உயர் தொழில்நுட்பம் கொண்ட ஆயுதங்களை இவர்கள் கொள்வனவு செய்யக் கூடுமென்ற அச்சம் எழுந்துள்ளதாகக் கூறப் படுகின்றது.



ஈராக்கிய அரசுடனான முடிவின்படி தீவிரவாத மதகுருமுக்ராடா அல்சாதரின் ஆதரவுப் படையினர் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கினார். சாதரின் ஆதரவுப் படையினர் ஆயுதங்களைச் சேகரிக்கின்றமையைப் படத்தில் காணலாம்.



ஆப்கான் தேர்தல் பணியாளர்கள் காபூலில் உள்ளவாக்கெண்ணும் நிலையமொன்றிற்கு எண்ணுவதற்காக வாக்குப் பெட்டிகளைக் கொண்டுவருகின்றனர்.

# ஈ-ராக்கில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரும்புக் கழிவில் வெடிக்கும் நிலையில்300 குண்டுகள்

ஈராக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரும்புக் கழிவுகளிலிருந்து நேற்று முன்தினம் 300 செயலிழக்காத வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

டில்லி,ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள இரும்புக் கழிவுகளிலிருந்து இந்த வெடி குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இது வரை இறக்குமதி செய்யப்பட்ட இரும்புக் கழிவுகளிலிருந்து சுமார் 900 வரையான வெடி குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இந்த இரும்புக் கழிவுகளை பாகிஸ்தானைச் சேர்ந்த இரும்புக் கழிவு வியாபாரி ஒருவர் வாங்கி அனுப்பியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது வெடிக்காத குண்டுகள் கழிவுகளில் வந்திருப்பதை அடுத்து இரும்பு உள்ளிட்ட உலோகக் கழிவுகள் இறக்குமதி விதிமுறைகளை மத்தியரசு கடுமையாக்கியுள்ளது.

இரும்புக் கழிவுகளில் வெடி குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் இதனால் நாட்டிற்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லையென்று பாதுகாப்பமைச்சர் பிரணாவ் முகர்ஜி கூறியுள்ளார்.

அதேவேளை உலோகக் கழிவுகளை இறக்குமதி செய்பவர்கள் அதிக விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## அலுவலகங்களின் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதற்கு பாதுகாப்பு முறைமை மறுசீரமைக்கப்படும்

ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான்



ஐக்கிய நாடுகள் சபையில் 778 புதிய பதவிகளை உருவாக்கி பாதுகாப்பு முறையை முற்றாக மறுசீரமைக்க வேண்டுமென செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஈராக்கிலுள்ள ஐ.நா தலைமையகம் தாக்கப்பட்டதையடுத்துப் பாதுகாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான யோசனைகள் முன்மொழியப்பட்டன. உலகம் பூராவும் அமைந்துள்ள தமது அலுவலகங்களின் பாதுகாப்பை ஒருங்கிணைப்பதற்காக புதிய பணியகம் தேவையென கொபி அனான் பொதுச்சபையில் சமர்ப்பித்த அறிக்கையில் கூறியிருக்கின்றார்.

இந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் 80 கோடி 70 இலட்சம் டொலர்கள் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதை விடுத்து மொத்த சக்தியை குறைப்பதையே ஹெரி விரும்புகிறார்

## -ஜோர்ஜ் புஷ் குற்றஞ்சாட்டுகிறார்-

(வோஷிங்டன்)

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக் கட்டுவதை விடுத்து அதனை ஏற்றுக் கொள்ளக் கூடிய மொத்த சக்தியை குறைப்பதையே ஜோன்கெரி விரும்புகிறார் என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

மெக்சிக்கோவில் இடம் பெற்ற குடியரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பயங்கரவாதத்திற்கெதிரான போரை மறுக்கிறார் என்று அவர் ஹெரி மீது குற்றம் சுமத்தினார்.

நவம்பர் 2ஆம் திகதி நடைபெறும் தேர்தலுக்கு முன்னதாக இரு முன்னணி வேட்பாளர்களும் மீண்டுமொருதடவை நேரடி தொலைக்கட்சி விவாதத்தில் பங்கேற்கவுள்ளார்கள்.

அதற்கு முன்னதாக புஷ், .ஹெரி ஆகிய இருவருக்குமிடையிலான சொற்போர் மிகவும் தீவிரமடைந்துள்ளது.

இருவரும் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

## அட்டாக் வீகோரி ஏவுகணை பாகிஸ்தான் வெற்றிகர பரிசோதனை

பாகிஸ்தான் மிக முக்கியமான நடுத்தர ஏவுகணையொன்றை நேற்று வெற்றிகரமாகப் பரிசோதனை செய்துள்ளது.

'அட்டாக்வீகோரி' என்று அழைக்கப் படும் இந்த ஏவுகணை சுமார் 1500 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இலக்குகளை மிகவும் துல்லியமாகத் தாக்கக் கூடியது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் மிக முக்கியமான ஏவுகணைச் சோதனையொன்றை செய்து பார்க்கவுள்ளதாக சனாதிபதி பர்வேஷ் முஷராப் கூறியதற்கிணங்க இந்த ஏவுக்ணை சோதனையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது ஆகும்.



அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் றம்ஸ்பீல்ட் (இடது) ஈராக்கிய இடைக்காலப் பிரதமர் இயாத் அலாவி (வலது)யை 'பச்சை'வலயத்திலுள்ள ஈராக்கிய இடைக்கால அரசாங்கக் கட்டடத்தில் சந்திக்கிறார்.

# மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் 2ஆம் லெப். மாலதி நினைவு நிகழ்வு

மன்னார் மாவட்டத்தில் உள்ள நானாட்டன் பிரதேசத்தில் 2 ஆம் லெப்.மாலதி நினைவு நாளும், பெண்கள் எழுச்சி நாளும் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு மன்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி நிலவரசி தலைமை தாங்கினார். மற்றும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் பொதுச் சுடர் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை மகளிர் பொறுப்பாளர் அவர்கள் ஏற்றிவைத்தார். மற்றும் நினைவுரைகளை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் அவர்களும், பேசாலை பிரதேசப் பொறுப்பாளர் அவர்களும், பேசாலை கடற்புலிகள் பொறுப்பாளர் அவர்களும், கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் அவர்களும் மற்றும் நானாட்டன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் காண்பிக்கப்பட்டன. இந்நிகழ்வுகள் நானாட்டான் ஆரோக்கிய மாதா மைதானத்தில் நடைபெற்றன.



சுகாதார சீர்கேடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வவுனியா பூந்தோட்டம் கல்வியற்கல்லூரி மாணவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததைப் படங்களில் காண்க. அதேசமயம் மேற்படி கல்வியற் கல்லூரியை மூன்று வாரகாலம் மூட சுகாதாரப் பிரிவினர் அறிவுரை கூறியுள்ளமை தெரிந்ததே. (21)

# 15 கோரிக்கைகள் குறித்துப்பேச கல்வியமைச்சு தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு

## -இன்று கொழும்பில் சந்திப்பு இடம்பெறும்

(திருமலை)

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ள பதினைந்து கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வருமாறு சிறிலங்காவின் கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி தாரா டிமெல் சங்க நிர்வாகத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.**

இப் பேச்சுவார்த்தை இன்று புதன்கிழமை கொழும்பு இசுருபாயா அலுவலகத்தில் நடைபெற விருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

பதினைந்து கோரிக்கைகளையும் ஒக்டோபர் பதினைந்தாம் திகதிக்கு முன்பதாக நிறைவேற்றாவிட்டால் நேரடித் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டிமெல்லுக்கு கடிதம் மூலம் செப்ரெம்பர் மாத இறுதியில் அறிவித்திருந்தது. தெரிந்ததே.

அதனையடுத்தே கல்வி அமைச்சின் செயலாளர் சங்கத்தின் தூதுக்குழு ஒன்றை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பதாகவும்; பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளைப் பொறுத்தே நேரடித்தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வதா? இல்லையா? என்பது தீர்மானிக்கப் படும் என்றும் பொதுச் செயலாளர் மகாசிவம் கூறினார்.

இடைக்கால அலவன்ஸாக மாதம் 3.000 ரூபா ஆசிரியர், அதிபருக்கு வழங்கப்பட வேண்டும். பாட நூல்களில் தமிழரின் வரலாறு திரித்துக் கூறப்படுவது நிறுத்தப் படவேண்டும்: ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் நீக்கப்படவேண்டும் வடக்கு,கிழக்கிற்கு வெளியே தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ் மொழியே தெரியாத சிங்கள அதிபர்கள், சிங்கள ஆசிரியர்கள், சிங்களக்கல்வி சாரா ஊழியர்கள் நியமிக்கப்படுவது நிறுததப்பட வேண்டும் என்பது உட்பட 15 கோரிக்கைக்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ளமை தெரிந்ததே. (25)

## பயிற்சி வகுப்பு

(மல்லாவி)

கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்பு மல்லாவி கால்நடைவைத்தியர் பணிமனையில் கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்றது. கால்நடை வைத்திய போதனாசிரியர் குருஸ், கால்நடை வைத்தியர் செல்வி வ.கிரிஜகலா ஆகியோர் பயிற்சி அளித்தனர். (24)

# நியமனம் கிடைத்த பட்டதாரிகளுக்கு அந்தந்த மாவட்டங்களில் பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாட்டங்களிலிருந்து அண்மையில் நியமனம் கிடைக்கப்பெற்றுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறி பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப் பெற்ற அந்தந்த மாவட்டங்களிலேயே நடைபெறவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் அவர்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபோது தெரிவிக்கையில்;

மேற்படி நியமனம் கிடைக்கப் பெற்றுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி முதல் தெரிவு செய்யப் பெற்ற மாவட்டங்களில் அதாவது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப் பெற்றுள்ள 100 வேலையற்ற பட்டதாரிகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப் பெற்றுள்ள 117 வேலையற்றபட்டதாரிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலும் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பெறவுள்ளதென மாகாண அமைச்சு தெரிவித்துள்ளதெனவும்; மேற்படி பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் நடைபெறும் இடங்கள் குறித்து கடிதமூலம் தெரியப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (சோ.கு)

# தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு 10,000 பனைவிதை நடுகைத் திட்டம்

(மல்லாவி)

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் துணுக்காய்ப் பிரதேச கமக்கார அமைப்புக்கள் கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம் கிராமங்களை மையப்படுத்தி தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கோட்டை கட்டியகுளத்தில் 50 ஏக்கர் திட்டத்தில் 10,000 பனை விதைகள் நாட்டப்படவுள்ளன.

முதற் திட்டமாக 5000 பனை விதைகள் நாட்டப் பட்டுள்ளன. கடந்த 6ஆம் திகதி ஆரம்ப நிகழ்வுகள் கோட்டைகட்டிய குளம் பொதுமண்டபத்தில் பொருண்மிய பிரதேச இணைப்பாளர் சசிகுமார் தலைமையில் இடம் பெற்றது.

மங்கல விளக்கினை கோட்டைகட்டியகுளம் கிராம அலுவலர் மரியதாசன், அம்பலப்பெருமாள் கிராம அலுவலர் இராசரத்தினம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கருத்துரையினை பிரதேச இணைப்பாளர் அமலன், அரசியல்துறை கிராமப் பொறுப்பாளர் ஈழவேந்தன் ஆகியோர்வழங்கினர்.மற்றும்அரசியல்துறை பொறுப்பாளர் புனிதன், கிராம அமைப்புக்களின் பிரதி நிதிகள் பொதுமக்களென பலரும் கலந்து கொண்டு பனை விதைகள் நாட்டும் வைபவத்தில் ஈடுபட்டுள்ளனர். (24)

# எக்கோ, கெயர் நிதியுதவியில் பொதுமக்களுக்கு உதவி

கேப்பாபிலவு திலக் குடியிருப்பில் உள்ள மக்களுக்கு முதற்கட்டமாக முப்பத்து மூன்று மலசலகூடங்கள் மூன்று பொதுக் கிணறுகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன இதேவேளை இக்கிராம மக்களில் பதினொரு பயனாளிகளுக்கு நெற்செய்கை, முப்பத்தொரு பயனாளிகளுக்கு சிறுதானிய செய்கைக்கான உதவிகளும் இரண்டு பயனாளிகளுக்கு ஆடும், ஆறு பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தெரிவித்துள்ளார். எக்கோ, கெயர் நிதியுதவியுடன் முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தினால் இவை செயற்படுத்தப்படுகின்றன. (05)

# மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 23 ஆம் திகதி இத்தேர்தல் நடக்கவுள்ளதெனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்திருந்தமை தெரிந்ததே. ஆயினும் இலங்கை சரித்திரத்தில் ஐந்தாவது தடவையாக மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென இவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


# 50 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் வருகை

(மன்னார்)

தமிழ் நாட்டின் திண்டுக்கல் மாவட்டம் குருப்பட்டி அகதி முகாமில் வசித்து வந்த 50 ஈழத் தமிழ் அக[illegible]ர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து சிறிய படகின் மூலம் தலைமன்னார் வந்து, தலைமன்னார் சிறிலங்காக் கடற்படை முகாமில் சரணடைந்தனர். இவர்களை தலைமன்னார்ப்பொலிசார் மன்னார் நீதி மன்றத்தின் முன் நிறுத்தினர்.இவர்களை மன்னார் நீதிபதி எம். எம் அப்துல்லா,அவர்களது சொந்த இடமானயாழ்ப்பாணம், சங்கானை, மணியந்தோட்டம், தெல்லிப்பளை, தலைமன்னார்,பியர் ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

தமிழகத்திலிருந்து தொடர்ச்சியாகப் பெருமளவு ஈழத்தமிழ் அகதிகள் தலை மன்னார் ஊடாக தாயகம் திரும்புகின்றமை தெரிந்ததே. (மி)




இராணுவ ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பின் கிளிநொச்சி நகரில் மாவட்டத்துக்கான பிரதம தபாலகம் இயங்கத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இன்னமும் கட்டடப் புனரமைப்புக்கள் உரிய வகையில் மேற்கொள்ளப்படாத நிலையில் இருப்[illegible]க்கில் காண்க (படம்-வரன்)

# முல்லை பிரதேசசபைகள் மூலமாக சுற்றுச் சூழலைப் பேண ஆராய்வு

முல்லை மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் மூலமாகச் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வழிவகைகள் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் கடந்த வியாழனன்று கரைதுறைப் பற்று பிரதேச சபை பொது நூலகத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஷ்ணசாமி தலைமையில் இடம்பெற்றது.

மாவட்டத்தின் சுற்றுச்சூழலை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்? அதற்கு எவ்வாறான தீர்வு காணலாம் என்பன குறித்து சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கலந்துரையாடலில் சிறப்புக் கருத்துக்களை முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராஜா, முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் மா.ரங்கன் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் நாயகன், கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ண பிள்ளை ஏனைய பிரதேச சபை செயலாளர்கள், முல்லை மாவட்ட சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் வழங்கினார்கள்.

இறுதியாகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கட்டடம் புதிதாக அமைத்தல் உட்பட உணவகங்கள் அமைப்பதற்கு என்ன வழிவகை மேற்கொள்ள வேண்டுமென்றும் வேறு பல விடயங்களும ஆராயப்பட்டன. (20)

# பெற்றோரை இழந்த சிறார்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தீவகத்தில் உள்ள புங்குடுதீவு பகுதியில் வாழும் பெற்றோர்களை இழந்த சிறார்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கென திருப்திகரமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை என அப்பகுதி மக்கள் அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கடந்த காலபோர்காரணமாக மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 80 சிறார்கள் தமது தாய்தந்தையரை இழந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் கணிசமான எண்ணிக்கையானோர் தாய், தந்தை ஆகிய இருவரையுமே இழந்துள்ளனர்.

இவர்களின் கல்வி, சமூகமேம்பாடு, புனர்வாழ்வு என்பவற்றை கவனத்திற் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த எந்த ஒரு அமைப்பினரும் திருப்திகரமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என சுட்டிக்காட்டும் அப்பகுதி மக்கள் அமைப்புக்கள்,

பெற்றோரை இழந்த சிறார்களின் வாழ்வை மேம்படுத்த உரிய நடவடிக்கைக்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (33)

# தொலைக்காட்சி, வானொலி பயன்படுத்த கடற்படை தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் உள்ள மண்டைதீவுப் பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பாவனை செய்வதற்கு கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் கடற்படையினர் மக்களை மீளக்குடியேற அனுமதித்தாலும் மண்டைதீவு முற்று முழுதாக இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாகவே தற்பொழுதும் நடைமுறையில் உள்ளது.

இதனால் மண்டைதீவிற்குள் பிரவேசிப்போர் மீது கடற்படையினர் மிக இறுக்கமான சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மண்டைதீவில் மீளக் குடியேறியுள்ள மக்கள் வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை பாவனை செய்யவும் வெளி இடங்களில் இருந்து இவற்றை மண்டைதீவிற்குள் எடுத்துச் செல்லவும் தடைவிதித்துள்ள கடற்படையினர்.

அத்தியாவசிய தேவைகளுக்காக வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றைப் மண்டைதீவிற்குள் எடுத்துச் செல்ல வேண்டுமானால் அதுகுறித்து படையினருக்கு முன் கூட்டியே அறிவித்து அதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்ற பின் எடுத்துச் செல்லலாம்எனவும் அறிவுறுத்தியுள்ளனர். (33)

# மின் குமிழ் ஒளிராதா?

யாழ்.கோப்பாய் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் நீண்டகாலமாக ஒளிராத நிலையில் உள்ளன. இதனால் அப்பகுதியில் இரவு நேர வீதி விபத்துக்களும், திருடர்களின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

இதனால் மேற்படி பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழை ஒளிரவைக்குமாறு கோரியும் உரிய தரப்பினர் நடவடிக்கையை எடுக்காமையையிட்டு விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்கு மறுதிகதி குறிப்பிடப்படாது ஒத்திவைப்பு!

## -சட்டமா அதிபர் ஆலோசனைக்காக காத்திருப்பு

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கு விசாரணைக்கு கிடப்பில் போடப்பட்டு விட்டது. அண்மையில் யாழ். நீதிமன்றில் நிமலராஜன் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் மேற்படி வழக்கு விசாரணையினை தொடர்ந்து முன்னெடுக்க ஏதுவாக சட்டமா அதிபர் திணைக்களத்தினது ஆலோசனைகள் கிடைக்கப்பெறும் வரை மறு திகதி குறிப்பிடாது விசாரணைகளை ஒத்திவைக்க யாழ்.நீதிவான் உத்தரவிட்டுள்ளார்

இதையடுத்தே மறு தவணை குறிப்பிடப்படாது நிமலராஜன் கொலை வழக்கு முடிவேதுமின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனிடையில் நிமலராஜன் படுகொலை சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்டிருந்த விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தமது பூர்வாங்க அறிக்கையினை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்துவிட்டதாக நீதிமன்றில் அறிவித்துள்ளனர். இது தொடர்பான இறுதி அறிக்கையினை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்தமையினை நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணைகளிற்கு தலைமை தாங்கியிருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ரஞ்சித்டி சில்வாவும் உறுதிப்படுத்தியுள்ளார். இதனிடையே 2000 ஆம் ஆண்டில் ஒக்ரோபர் 19 ஆம் திகதி தனது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் உயிரிழந்தது எதிர் வரும் 19 ஆம் திகதியுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.(27)

# மாலை நேர ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மக்கள் நலன் சேவைச்சங்கத்தினரால் மாலைநேர ஆங்கிலவகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேச மக்களது நன்மையை கவனத்திற் கொண்டே இவ் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலவசமாக கிராம மட்டங்களில் நடத்தப்பட்டு வரும் இவ் வகுப்புகளில் ஏராளமான மாணவர்கள் பங்கு பற்றி பயன் பெற்று வருகின்றனர். (33)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்ற 350 பேர்

## -வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற் கல்வி கற்ற 350 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் மத்திய கிழக்கு நாடான கட்டாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் ந.யோகராஜன் எடுத்த நடவடிக்கை காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலுவலக அதிகாரிகள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு சமுகம் கொடுத்து தொழில்துறை பயிற்சியில் சித்தியடைந்த மாணவர்களுடன் கலந்துரையாடலை நடத்தியிருந்தனர்.

அண்மையில் சுமார் 350 பேருக்கு கொழும்பில் நடைபெற்ற தொழில்சார் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே அனுப்பப்பட்டுள்ளனர்.

இதில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மின்இணைப்பாளர்கள், குழாய் பொருத்துனர்கள், இயந்திரம் திருத்துனர்கள் எனப் பலரும் அனுப்பப்பட்டுள்ளனர்.கடவுச் சீட்டு இன்மையால் ஒரு பகுதியினர் செல்லவில்லை. கடவுச்சீட்டு கிடைக்கப்பெற்றதும் மேலும் ஒரு பகுதியினர் செல்லவுள்ளனர். (41)

# இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட 8 பொதுமக்கள் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட எட்டுப் பொதுமக்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதுக்காட்டுச் சந்தியில் நடைபெற்றது.

11.10.1987ஆம் ஆண்டு ஆனையிறவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவம். புதுக்காட்டுச் சந்தியில் பேருந்துக்காகக் காத்திருந்த அப்பாவிப் பொது மக்கள் எட்டுப் பேரை ஈவிரக்கமின்றிக், காட்டுமிராண்டித்தனமாக சுட்டுத்தள்ளியது. இதில் மூன்று சிறுவர்கள் உட்பட எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் பளை அரசியல் துறையின் ஏற்பாட்டில் சோரன்பற்று தேசிய எழுச்சிப்பேரவையின் ஒழுங்குபடுத்தலில் இயக்கச்சிப் புதுக்காடு வலயப்பொறுப்பாளர் ரூபன் தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு புதுக் காட்டுச் சந்தியில் ஒழுங்கமைக் கப்பட்ட நினைவுப் பந்தலில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை மாவீரன் செங்கோளனின் தந்தையார் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை பளை கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் வின்சன் ஏற்றிவைத்தார். அதனை அடுத்து இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மூன்று சிறுவர்கள் உட்பட எட்டுப் பேரின் திருவுருவப்படங்களுக்கு பெற்றோரும், உறவினர்களும் சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து நிகழ்வுகளும், கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இச்சம் பவத்தில் நான்கு பொது மக்கள் படுகாயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு உடமைகள் பல எரிக் கப்பட்டு, காரொன்றும் இந்திய இராணுவத்தால் எரிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் 6 பேர் சோரன் பற்று பகுதியையும், ஒருவர் பளை இத்தாவில் பகுதியையும், மற்றும் ஒருவர் மருதங்கேணி பகுதியையும் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் நினைவாக புதுக்காட்டுச் சந்தியில் நினைவுத்தூபி ஒன்றுகட்டப்பட்டுள்ளதாக சோரன் பற்று தேசிய எழுச்சிப் பேரவை தெரிவிக்கின்றது.(11)

# சிறப்புற நடைபெற்ற தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் தமிழ் இலக்கியப்பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டில் இடம்பெற்றன.

முன்னதாக பிற்பகல் 3.30 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் இருந்து இலக்கியப் பெரு விழாவினை உணர்த்தும் ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

நல்லூர் ஆலய முன்றலில் இருந்து அரசடி வீதியூடாக யாழ். இந்து மகளிர் கல்லூரியை அடைந்த ஊர்வலத்தில் பெரிய அளவிலான "தமிழ்த்தாயின்" உருவப்படமும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. ஊர்வலம் பயணித்த வீதியெங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் வீடுகள் தோறும் 'நிறைகும்பம்' வைக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டிருந்தது.

இறுதி நாள் மாலை நேர நிகழ்வுகளிற்கு கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமை ஏற்றிருந்தார்.முதன்மை விருந்தினராக மாகாண சபையின் பிரதமசெயலர் எஸ்.ரங்கராசாவும், கௌரவ விருந்தினராக பேராசிரியர் கா.சிவத்தம்பியும் வருகை தந்திருந்தனர்.நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கினை யாழ்.கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், கல்வியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதன், யாழ். மாநகர ஆணையாளர்க.குணராசா, மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் மற்றும் கல்வி அமைச்சின் செயலர் ஆர்.தியாகலிங்கம் உள்ளிட்டபலர் ஏற்றிவைத்தனர்.

தமிழ் தாய்க்கு மாலை அணிவித்து பிரதம செயலாளர் எஸ் ரங்கராசா வணக்கம செலுத்தினார் இதைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டிற்கான இலக்கியவிருதுகளும், ஆளுநர் விருதுகளும் வழங்கப்பட்டன.

*ஓவியத்துறை மற்றும் கல்வித் துறைக்கு மு.கனகசபை.

*ஓவியம், ஒப்பனைக்கலை, புகைப் படக் கலை பி.ஸ்ரனிஸ்லாஸ்.

* நாட்டார் பாடல், நாட்டுக்கூத்து, மரபுக் கவிதை, நடிப்பு ,நாடக எழுத்துரு. செல்லத்துரை.

* கலை இலக்கியம், திறனாய்வு, பந்தி எழுத்து, ஒலிபரப்பு கே.எஸ்.சிவகுமாரன்.

* கல்வி நாடகம் பிரதியாக்கம், நெறியாள்கை- குழந்தை ம.சண்முகலிங்கம்.

*கல்வி ஆக்க இலக்கியம்- இரா.சடாட்சரதேவி(குந்தவை)

*சிறுகதை ஆய்வு -எஸ்.எல்.எம்.ஹனிபா

* கல்விச் சேவை,சமூக சேவை,பதிப்பு முயற்சி, ஆய்வு முயற்சி, எழுத்து முயற்சி -வயிரமுத்து சிவசுப்பிரமணியம்

ஆகியோரே ஆளுநர் விருதைப் பெற்றிருந்தனர். இலங்கை இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளி 'மலரவன்' இன் நூலிற்கான இலக்கிய விருதை அவரது தாயார் பெற்றுக் கொண்டார். விருதுகளை பேராசிரியர் கா.சிவத்தம்பி, பிரதம செயலாளர் எஸ். ரங்கராசாஆகியோர் வழங்கினர். பேராசிரியர் கா.சிவத்தம்பி பற்றிய ஒளிப் பேழையொன்றும் நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது. (27,33,செ)







(படங்கள் - செல்வா)

# ஆதவனின் அனுபவப் பகிர்வு

அன்பு வாசகர்களே....!

சுவிற்ஸர்லாந்திலுள்ள 'கன்னி மலை' பற்றிச் சொல்லியிருந்தேன். அந்த மலை மக்களுக்குத் தெரிந்த காலந்தொட்டு அது பனி மூடியபடியே இருக்கிறது. எந்தக் கோடையிலும் அந்தப் பனி உருகியதே இல்லையாம்.

சுவிற்ஸர்லாந்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அந்த மலையைத் திரள்திரளாகச் சென்று பார்வையிடுவார்கள். நான் மூன்று தடவைகள் சென்றிருக்கிறேன்.

தொடர்ந்து அந்த மலையின் அடிவாரத்திற்குச் செல்ல வேண்டும். பின்னர் ஒரு சிறிய தொடருந்து மலையின் நடுப் பகுதிவரை இட்டுச் செல்லும். அதன் பின்னா கம்பிகளும் சங்கிலிகளும் கொண்ட ஒரு இழுவை வண்டியில் உச்சிக்குச் செல்ல வேண்டும். அந்த மலையுச்சியில் இருந்து கீழேபார்த்தால் பனிபடர்ந்த பாறைகளும் பனியில்லாத பச்சைப் புல்வெளிகளும் பச்சை வெள்ளை நிறத்தில் மிகவும் அழகாக இருக்கும்.

இந்தப் பனிப்பாறை உச்சியில் பனியைக் குடைந்து உள்ளே மிக அற்புதமான பிரதேசத்தைச் செய்து வைத்திருக்கிறார்கள். சாதாரண குகைக்குள் செல்வதே ஒரு நல்ல அனுபவம். இது பனிக்குகை. மேலேயும் பக்கவாட்டுச் சுவர்களும் தரையும் ஐஸ்கட்டி உறைந்து போன பனி.

சனங்கள் வழுக்காமல் இருப்பதற்காக பக்கவாட்டுச் சுவர்களில் கம்பிகள் போட்டிருக்கிறார்கள் அவற்றைப் பிடித்த படியே நடந்து சென்று பார்வையிடவேண்டும்.

உள்ளே வர்ணவிளக்குகள் பொருத்தியிருக்கிறார்கள்.

அழகான ஐஸ்தொட்டிகளில் விதவிதமான மீன்களும் உண்டு.

ஐஸுக்குள் ஒரு அருங்காட்சியகம்...... கற்பனை பண்ணிப்பாருங்கள் சில்லென்ற குளிர் வர்ண விளக்குகள்.... மலையுச்சியைக் குடைந்து உள்ளே மனிதர்கள்..... அபூர்வமான ஒரு அனுபவம் அது.

திடீரென எனக்கு ஒரு அதீதகற்பனை வந்தது. இந்தப் பனி இப்பொழுது உருகத் தொடங்கி விட்டால் என்ன நடக்கும்? இவ்வளவு உயரத்திலிருந்து எல்லோருமே வழுக்கி வழுக்கி பள்ளத்தாக்குகளுக்குள் விழுந்து இறந்துவிட வேண்டியதுதான். காலங்காலமாக உருகாத பனி இப்பவா உருகப் போகுது? என்று நினைத்தேன். ஏன் உருகாது? காலங்காலமாக இருக்கும் பூமியில்தானே பூமியதிர்ச்சி நடந்தது; நடக்கிறது. மண்சரிவுகள் நடக்கின்றது தானே! பயம் மனதைக் கவ்விக்கொள்கிறது. பயணங்கள் பலவகை.

திகிலும் பயமும் கலந்த பயணங்கள் தான் சுவாரஷ்யமானவை.

இந்தக் 'கன்னி ஐஸ்மலைக்குகை' பயத்தை ஏற்படுத்தியதுதான் ஆனால் கற்பனை பண்ணும் பொழுது தான் பயம் ஏற்பட்டது.

உண்மையிலேயே பய உணர்ச்சியின் மூலவேர் கற்பனைதான். கற்பனை இல்லாவிட்டால் பயம் இருக்காது. ஆனால் கற்பனை இல்லாவிட்டால் வாழ்வில் சுவாரஷ்யங்களும் இருக்காது.

இந்த ஐஸ்அருங்காட்சியகத்தில் பனிச் சிலைகள் இருக்கின்றன. கல்லைச் செதுக்கிச் சிற்பங்கள் செதுக்கியது போல உறைந்த பனியைச் செதுக்கி அற்புதமான சிற்பங்களைச் செய்து வைத்திருக்கிறார்கள். சில தலைவர்களின் சிற்பங்கள் கூட உண்டு.

பனிச் சிற்பங்கள் கண்ணாடிப் பொம்மைகள் போல வர்ண ஒளிகள் பட்டுத் தெறித்து மிக மிக ரம்மியமாய் இருந்தன.

நண்பர் வேலு.சரவணன் மிகுந்த ஆவலுடனும் உற்சாகத்துடனும் ஓடிஓடி அந்தக் குகைக்குள் காட்சிகளைப் பார்த்தார். எனது புத்திமதியை அவர் கேட்பதாக இல்லை.

*.ஓடவேண்டாம்

*. 'ஸ்வெற்றரை'க் கழற்ற வேண்டாம்

* இந்தியாவில் பேசுவது போல் கத்திக் கத்திப் பேசவேண்டாம்.

என்று பல தடவைகள் கூறினேன். அவா ஆவல் மிகுதியால் என் புத்திமதிகளைக் கேட்கவில்லை. அதன் விளைவுகளை உடனேயே அவர் அனுபவித்தார்.

மூன்று தடவைகள் வழுக்கி விழுந்தார். ஒரு தடவை தலை அருந்தப்பு.

'ஸ்வெற்றரை'க் கழற்றிவிட்டுத் திரிந்தமையால் அடுத்த இருநாட்கள் காய்ச்சலில் கிடந்தார்.

உரத்துப் பேசியதால் இரு ஜேர்மன் நாட்டு இளைஞர்களிடம் கெட்ட வார்த்தைகளினால் திட்டு வாங்கினார். அவர்கள் அவரைத் திட்டும் பொழுது அவர் அவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

அவர் நினைத்தார், அவர்கள் தன்னை இரசிக்கிறார்கள் என்று. அவருக்குப் பாஷை புரியவில்லை.

நான் மொழிபெயர்த்துக் கூறியதும் அவர் அசடு வழிந்தார்.

* * * *

பயமும் திகிலும் நிறைந்த பயணம் ஒன்றைச் சொல்கிறேன். இது சுவிற்ஸர்லாந்திற்கும் இத்தாலிக்கும் இடையில் 'அல்ப்ஸ்' மலையடிவாரங்களில் நடைபெற்றது.

'அல்ப்ஸ்' மலைச்சிகரங்களில் எனக்குக் கொள்ளைப் பிரியம் என்று சொன்னேன் அல்லவா? அதை அனுபவிப்போம் என்று நினைத்து ஒரு பயணத்தை ஆரம்பித்தேன்.

சுவிற்ஸர்லாந்திலிருந்து இத்தாலிக்கு காரில் பயணிப்பது என்று முடிவு செய்தேன். பொதுவாக எல்லோரும் பாவிக்கும் பெருந்தெருக்களைப் பவிக்கக் கூடாது என்று நினைத்தேன் பெருந்தெருக்களில் காரில் பயணம் செய்வது எனக்கு அறவே பிடிக்காது.

மாற்றுவழிகளில் எப்படிப் போவது என்று யோசித்தேன்.

இணையத்தளத்தில் தேடிப் பார்த்தேன். இணையத்தளத்தில் இப்போது எல்லாப பாதைகளும் படத்துடன் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இத்தாலிக்குப் போவதற்குரிய பல பாதைகளைக் கண்டேன். அவற்றில் மலைகளுக்கூடாகப் போகும் பாதையைத் தெரிவு செய்தேன்

குறுகிய பாதைகளாகவும், பாலங்கள் நிறைந்ததாகவும் Computcr Scren இல் அதன் படம் இருந்தது. மலைப்பாதை அப்படித்தானே இருக்கும் என நினைத்துக் கொண்டேன். எனது இலக்கிற்கு எனது ஆரம்ப இடத்திற்குமான தூரம் 850 கி.மீ. என்றும் அறிந்து கொண்டேன்

அதிகாலை புறப்பட்டால் மலைக்குள் போய்விடலாம் எனத் தீர்மானித்து நல்ல ஒரு அதிகாலையில் என் பயணத்தை ஆரம்பித்தேன்.

'அல்பஸ்' மலையின் நீண்ட பல மலைத் தொடரின் ஒரு பகுதி சுவிற்சர்லாந்தில் இருக்கின்றது. அந்த மலைத் தொடர்களை ஊடறுக்கும் பாதையை Symlon passenge என்றழைப்பார்கள்.

முதல் ஒரு கொஞ்சத்தூரம் பயணம் மிக இலகுவாக இருந்தது. அதிகாலை கோடை காலம் முடிகின்ற காலப்பகுதி அது. இலையுதிர் காலத்தின் ஆரம்பகாலம் என்று சொல்லலாம். மரங்களின் இலைகள் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நிறத்திற்கு மாறிக் கொண்டிக்கும் காலம் காலைச்சூரியனின் பொற் கிரகணங்களால் மஞ்சள் ஒளி மஞ்சள் இலைகளுக்கூடாக மஞ்சள் கம்பளம் போல் மலைச் சிகரங்கள் மீது அந்த நிலம் முழுவதும் போர்த்தியிருந்தது. எவ்வளவு சுகமான பயணம் அது.

அந்தச் சுகமான பயணம் நீண்ட நேரம் நீடித்திருக்கவில்லை. தெருக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒடுங்கத் தொடங்கின. சுற்றிச் சுற்றி மலைகளில் ஏறுவதும் பின்னர் இறங்குவதுமாக அந்தத் தெரு நீண்டுகொண்டே போயிற்று 200கி.மீ கடந்து விட்டேன்.

அப்பொழுது நான் ஒன்றை அவதானித்தேன். அந்தத் தெருவில் போக்கு வரத்து பெரிதாக இருக்கவில்லை. 30 நிமிடத்துக்கு ஒரு தடவைதான் ஏதாவது ஒரு வாகனம் என்னைக் 'குறொஸ்' பண்ணியது. ஒரு வீடுகளும் இருக்கவில்லை. நான் மலைச்சிகரங்களை இரசித்துக்கொண்டிருந்ததில் இவற்றைக் கவனிக்கவில்லை. பாலங்களும் மிகக் குறுகியதாக இருந்தன.

காருக்கு Full ஆக எரிபொருள் நிரப்ப வேண்டும் என நினைத்து எரிபொருள் நிலையத்தைத் தேடினேன் எங்கு தேடுவது யாரைக் கேட்பது? திரும்புமிடமெங்கும் மலையும், பள்ளமும். எதிரே ஒரு வாகனம் வந்ததும் நான் அதை மறித்தேன். அந்தச் சாரதியிடம் விசாரித்தபொழுது இன்னும் 25கி.மீ தூரத்தில் ஒரு எரிபொருள் நிலையம் இருப்பதாகக் கூறினான்.

எரிபொருள் விற்பவன் என்னிடம் காசு வாங்கும் போது எங்கே போகின்றாய் எனக் கேட்டான். நான் இத்தாலிக்குப் போகிறேன் எனச் சொன்னதும் அவன் என்னை அதிசயமாகப் பார்த்தான். பின்னர் இந்தப் பாதை அதற்கு உகந்ததல்ல என்றாலும் போய்ப் பார் என்றான்.

எனக்குள் ஒரு பீதி குடிகொண்டது. போவோமா? விடுவோமா? என்று என்னை நான் கேட்டேன் அப்பொழுது எதிரே இருந்து

## பாகம்-16

ஒருவாகனம் எரிபொருள் நிரப்ப வந்தது அவனைக் கேட்டேன் இந்தப் பாதை எப்படி என்று அவன் சொன்னான். "no problem (பிரச்சினை இல்லை)" என்று.

திரும்பிப் போக எனக்கு மனம் இருக்கவில்லை. நான் தொடர்ந்து பயணிக்க ஆரம்பித்தேன்.

வளைந்து வளைந்து 'அல்ப்ஸ்' மலை தன் குணத்தைக் காட்டியது. நானும் தொடர்ந்து காரைச் செலுத்திக்கொண்டே இருந்தேன். சில இடங்களில் பெரிய பள்ளத்தாக்குகள் இருந்தன. 'பள்ளத் தாக்கு' என்பதைக் காட்டுகின்ற பெயர்ப் பலகைகளைக் காணவில்லை. ஓரங்களில் வழமையாக கம்பிகள் இருக்கும் அவை கூட இல்லை மெதுவாக மிக மெதுவாக காரைச் செலுத்த வேண்டியதாயிற்று அப்பொழுது காலநிலையும் சற்று மாறத்தொடங்கியது. முகில்கள் கீழிறங்கத் தொடங்கின. கொஞ்சங்கொஞ்சமாக முகில்கள் தெருவெங்கும் இறங்கி விட்டன. சுமார் 10 மீற்றர் தூரத்தைத்தான் பார்க்க முடிந்தது. அதற்கு மேல் அப்பால் என்ன இருக்கிறது என்று பார்க்கவே முடியவில்லை.

காரை இனிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஒன்றுமே தெரியவில்லை. காரை நிறுத்திவிட்டேன். எங்குமே ஒரே புகார்.

தனியே தட்டத்தனியே...... புகார் மத்தியில் மலைச் சிகரங்களுக்கு நடுவே ஒன்றையுமே பார்க்க முடியாமல் எங்கே நிற்கிறேன் என்பது கூடத்தெரியாமல் நான் தட்டத்தனியே விடப்பட்டேன்.நெஞ்சு ' திக்திக்' என்று அடித்துக்கொண்டே இருந்தது. (அடுத்த வாரம் பார்ப்போம்).

# வானங்களைக் கடத்தி விற்பனை செய்த இராணுவ மேஜர் ஒருவர் கண்டியில் கைது

அக் குரணையில் வைத்து வாகனம் ஒன்றின் சாரதியை தாக்கி அவரிடம் இருந்து வாகனத்தைக் கடத்தி வந்த இராணுவ மேஜர் ஒருவர் நேற்றுமுன்தினம் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் முதலாம் விஜயபாகு படையினை சோந்தவராவார். இவர் கைது செயய்யப்பட்ட வேளையில் அவருடன் உதவிக்கு வந்த இராணுவ சிப்பாய் ஒருவரும் கைது செய்ப்பப்பட்டார். அவர்கள் இருவரும் தற்சமயம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.இவர்கள் ஏற்கனவே பல வாகனங்ளை கடத்தி சென்று வட பகுதில் விற்பனை செய்து வந்தவர் என்ற தகவல் வெளியாகியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

# முஸ்லிம் ஊர் காவல் படைக்கு ஆயுதம் கோருகிறா ர ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

எல்லைப்புற முஸ்லிம் மக்களை பாதுகாத்து கொள்வதற்கு முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஆயுதங்களை ஏந்த வேண்டிய நிலை தோன்றியுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார். எல்லைப்புற முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பிற்கு உருவாக்கப்பட்டள்ள ஊர்காவல் படை சிப்பாய்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதன் மூலமே முஸ்லிம்மக்ளை பாதுகாக்க முடியும் என்று கூறியுள்ள ஹக்கீம் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தான் கலந்துரையாட உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (32)

# புனரமைப்பு

(மல்லாவி)

உலக உணவு திட்டத்தின் கீழ் துணுக்காய்ப் பிரதேசத்தின் 7 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட விளையாட்டு மைதானமொன்று புனரமைக்கப்பட்டு வருகின்றது. கழகங்களின் வர்ர்கள், பொது மக்கள், பொது நிறுவனங்கள் என்பனவற்றின் ஒத்துழைப்புடன இவ்வேலைகள முன்னெடுக்கப் படுகின்றன. (24)

# பெற்றோரை இழந்த மாணவருக்கு பாடசாலை உபகரணம் வழங்கல்

பூநகரி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் பெற்றோர்களை இழந்த ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த 26 மாணவர்களுக்கு பூநகரி மகாவித்தியாலய பழையமாணவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான சரவணமுத்து சண்முகதாஸால் அனுப்பிவைக்கப்பட்ட புத்தக பாக்குகள், கற்றல் உபகரணங்கள் ஆகிய பொருட்கள் பூநகரி மகாவித்தியாலய அதிபர் பொன் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டன மேற்படி நிகழ்வில் பூநகரி கோட்டக்கல்வி அதிகாரி தி.கணபதிப பிள்ளை, மாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.வேதநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.இதேவேளை, சென்ற ஆண்டு இப்பாட சாலைக்கு தமது மகளின் பிறந்தநாள் அன்பளிப்பாக மூன்று அலுமாரி களை ச.முத்துவேலு என்பவர் அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்செய்கை மேற்கொள்ளாதீர்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் மாங்குளம் பிரதேசத்தில் உள்ள பாதிக்கப்பட்ட சிறு குளங்களின் அணைக்கட்டு பகுதிகளிலோ அல்லது குளங்களின் உள்ளே அதற்குரிய காணிகளிலோ பயிற்செய்கையினை மேற்கொள்ளவேண்டாம் இதனையும் மீறி இச் செயலில் ஈடுபடுவோரின் செயற்பாடுகள் முற்றாகத் தடுத்து நிறுத்தப்படும் என தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசப் பகுதியினர் அறியத்தருகின்றனர். (05)

**04.**

* சமாதான நடவடிக்கைகள் கைகூடாத நிலையிலும் விடுதலைப்புலிகள் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது மகிழ்ச்சிக்குரியதென நோர்வே துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் சுவிஸில் அரசியல் விவகார சட்ட வல்லுனர் குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பில் தெரிவிப்பு.



ஹெல்கேசனுடன் சந்திப்பு

* பேச்சுவார்த்தைக்குத் திரும்ப புலிகளை ஊக்குவிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசாங்கம் திட சங்கற்பம் பூண்டுள்ளது என சனாதிபதி தேசிய ஆலோசனைச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவிப்பு.

*வாகரை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலி.

* உலகவங்கிப் பிரதிநிதிகள். யாழ்.குடா நாட்டுக்கு விஜயம்.



பிரதிநிதிகள் பார்வை...

* இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவின் அடிப்படையில் பேச்சுக்கள் தொடங்குகின்ற போது முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் சம்பந்தமாக ஜெனீவா மாநாட்டில் ஆராய்ந்தோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

*

பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ பதவியேற்பு.

* மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் அத்து மீறி மீன் பிடித்த 25 இந்திய மீனவர்கள்,சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

**05**

* லெப்கேணல் புலேந்திரன், லெப்கேணல் குமரப்பா உட்பட பன்னிருவேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.



பன்னிரு வேங்கைகள் நினைவாக...

* சனாதிபதி தரப்பில் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கான ஆக்கபூர்வ முன்னெடுப்பில்லையென அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.சி க்குத் தெரிவித்தார்.

* அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும், ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு சுவிற்சர்லாந்தில் இடம்பெற்றது.



சுவிற்சர்லாந்தில்...

**06.**

* தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சுவிற்சர்லாந்திலிருந்து ஒஸ்திரியாவிற்கு விஜயம்.

*

2 ஆம் லெப். மாலதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு மாபெரும் படைக்கலக் கண்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பம்.




ஆரம்பநிகழ்வில்...




* வவுனதீவு பிரதேச செயலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் பாதுகாப்புப்படைத் தரப்பினருக்குமிடையில் மட்டக்களப்புப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் அனுசரணையுடன் சந்திப்பு இடம்பெற்றது.

* சர்வதேச ஆசிரியர்தின நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டன.



ஆசிரியர் கௌரவிப்பு

*முகமாலை போக்குவரத்து நேரத்தை நீடிப்பது குறித்து இன்னும் நான்கு நாட்களுக்குள் அறிவிக்கப்படுமென யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி, யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம் பெற்ற சந்திப்பில் தெரிவிப்பு.

* கொழும்பு காசல் மருத்துவ மனையில் ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள் பிறந்தனர்.



இசைத்தட்டு வெளியீடு...

**07.**

*லெப்.கேணல் நிரோஜனின் நினைவு நிகழ்வும், "அலைபாடும்பரணி" இசைத்தட்டு வெளியீடும் முல்லைத்தீவில் இடம்பெற்றன.

* தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

* ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் அரசாங்கம் காலதாமதமின்றிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

**08.**

*அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் ஆஸ்திரியப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

*

சமாதானத்திற்கு எதிரான இனவாத சக்திகள் திருகோணமலையைத் தங்கள் வன்முறையின் மத்திய இடமாக மாற்றியுள்ளதைக் கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.



திருமலையில் கதவடைப்பு...

* தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி திருமலையில் தமிழ் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

*சுவீடன் நாட்டைச் சேர்ந்த தூதுக்குழுவினர் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம்.

* அரசின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபால யாழ்.விஜயம்.

*சுவிஸ் வெளியுறவு அமைச்சர் மிக்கெலின் கல்மிறே அம்மையார் கொழும்பிற்கு விஜயம்.

*இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்குக என ரணில் சனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிப்பு.

**09.**

* யாழ்நகரில் சிறிலங்கா பொலிசாருக்கும், பொதுமக்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் இரண்டு பொலிசார் உட்பட பலர் காயமடைந்தனர்.

*

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இரவு ஏற்பட்ட வீதி விபத்தில் ஒருவர்பலி.



விபத்தின் கோரம்...

* புதிய தலைமுறையின் ஒளிமயமான வாழ்வு பெண்கள் வாழ்வில் ஏற்படும் மாற்றத்திலேயே உள்ளதென தமிழீழ பெண்கள்எழுச்சி நாளை முன்னிட்டு அரசியல்துறை மகளிர் பிரிவினர் விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு.

*அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஆஸ்திரியாவில் வெளிநாட்டு அறிஞர்களைச் சந்தித்தனர்.



ஆஸ்திரியாவில்...

**10.**

* தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும், 2 ஆம் லெப் .மாலதியின் நினைவு நாளும் தமிழர் தாயகமெங்கும் பெரும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டன.

*



பெண்கள் எழுச்சி நிகழ்வில்...

2 ஆம் லெப். மாலதியின் உருவச் சிலை இரணைமடுச் சந்தியில் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது.



உருவச்சிலை திறப்பு...

* மட்டக்களப்பு மாவட்டத்தில் போராட்டத்தில் 'இணையச்சென்ற இரு சிறுமிகளை விடுதலைப்புலிகள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

* சூழ் நிலைக்கேற்ப இராணுவத்தை மேலும் பலப்படுத்த வேண்டுமென இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டே கொட சிறிலங்கா இராணுவத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் தெரிவிப்பு.

* மகளிர் படையணியின் வெளியீடான "அக்கினிப் பறவைகள்" ஒளிநாடா அறிமுகவிழா கோப்பாய் கந்தசுவாமி கோவிலில் இடம் பெற்றது.

# முல்லைமாவட்ட சி.க.கூ சமாசம், சி.க.கூ சமாச மாவட்ட வங்கி என்பவற்றின் வாடிக்கையாளர்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளும் சேவைகள்

## சமாசத்தில் சங்கங்கள் இட்டுள்ள வைப்புக்களுக்கான வட்டி வீதம்:-

| | | | |
|---|---|---|---|
| நிலையான வைப்பிற்கு | 15% | கட்டாய சேமத்திற்கு | 10% |
| சாதாரண சேமத்திற்கு | 10% | | |

## சமாசத்தில் அங்கத்துவ சங்கங்கள் பெறும் கடனுக்கான வட்டி வீதம்:-

| | | | |
|---|---|---|---|
| விவசாயக்கடன் | 18% | சூரியகலக்கடன் | 17% |
| விசேட கடன் | 19% | விதவைகள் கடன் | 10% |
| நீண்டகாலக் கடன் | 17 | நுண்நிதியீட்டல் கடன் | 6% |

## முல்லை மாவட்ட சி.க.கூ.சமாச வங்கியின் வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| நிலையான வைப்புக்கு | 10% | சிறுவர் சேமிப்பு வைப்புக்கு | 12% |
| சாதாரண சேமிப்பு வைப்பு | 8% | | |

## முல்லைமாவட்ட சி.க.கூ. வங்கியின் அரச உத்தியோகத்தர்கள், கூட்டுறவுப் பணி யாளர்களுக்கான கடன்களுக்கான வட்டி வீதம் :-

| | | | |
|---|---|---|---|
| உத்தியோகத்தர் கடன் | 20% | ஈட்டுக் கடன் | 18% |
| சூரியகலக்கடன் | 17% | | |

## ஏனைய சேவைகள்:-

- கணினி மூலமான வேலைகள்
- போட்டோப்பிரதிகள்
- றோணியோ மூலமான பிரதிகள்
- கதிரை வாடகைக்கு விடுதல்
- தளபாட உபகரணங்கள் விற்பனை
- சூரியகலங்கள் கடனுக்கும் உடன் காசிற்கும் விநியோகித்தல்
- காகிதாதி, எழுதுபொருட்கள் நியாய விலையில் வழங்குதல்
- சீமெந்து விநியோகம்

தகவல்:-
மாவட்டச் செயலாளர்,
இ.யோசேப்ஸ்ராலின்,
முல்லை மாவட்ட சி.க.கூ சமாசம்

(சி10575)

### இருபது ஆண்டுகால தலைமறைவு வாழ்க்கையில் இருந்த

# நக்சலைட்டுத் தலைவர்கள் ஆந்திர அரசுடன் பேச்சுநடத்த முடிவு!

20 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாகி இருந்த நக்சலைட்டுத் தலைவர்கள் இந்தியாவின் ஆந்திர மாநில அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்வந்துள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஐதராபாத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் இவர்கள் கடந்த 20 ஆண்டு காலமாக ஆயுதப் போராட்டம் நடத்தி வந்தனர். இவர்கள் மீது ஆந்திர மாநில அரசு தடை விதித்திருந்தது. பின்னர் ஆந்திராவை ராஜசேகர ரெட்டி தலைமையேற்று ஆட்சி செலுத்த முற்பட்ட வேளை இவர்கள் மீதா தடை நீக்கப்பட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டனர்.

மக்கள் யுத்தக்குழு செயலாளரான ராமகிஷ்ணன் உட்பட 25 இற்கு மேற்பட்ட உயர்மட்டத் தலைவர்கள் சிறிசேலம் காட்டில் இருக்கும் சின்னாருக்கா கிராமத்தில் இருந்து நேற்று முன்தினம் வெளியே வந்தார்கள் . அப்போது பேசிய ராமகிஷ்ணா அரசுடனான பேச்சுவார்த்தைகளில் தமது பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படும் என்று கூறினார்.

ஏழைகளுக்கு நிலங்களைப் பகிர்ந்தளித்தல், பூரண மது விலக்கை அமுற்படுத்தல் தனி மாநிலம் அமைத்தல் உட்படப் பல அம்ச கோரிகைகளை முன்வைத்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாகக் கூறினார்.

## ஆலோசனை


ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசிற்கும், இடதுசாரிக் கட்சிகளுக்குமிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்புகளின் கூட்டம் புதுடில்லியில் நேற்று நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியுள்ளார். இதன்போது மார்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர், மூத்த தலைவர் சீத்தாராம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி.வரதன், ஆகியோர் உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் வடகிழக்கு மாநிலங்களில் அண்மையில் தீவிரவாத அமைப்புகளுடன் பேச்சு நடத்த மத்திய அரசு விருப்பம் தெரிவித்திருப்பது இந்த அமைப்புகளுக்கு வங்கதேசம், மியன்மார் ஆகிய நாடுகள் அடைக்கலம் அளித்துவரும் பிரச்சினையில் மத்தியரசின் நிலைப்பாடு ஆகியவை குறித்து இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் இன்றைய கூட்டத்தின் போது பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட தலைவர்களிடம் விளக்க்ம் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


## 4 ஆம் ஆண்டின் கண்ணீர் காணிக்கை

தாய்க்கு முத்தாக 17 - 02 - 1976



தமிழுக்கு வித்தாக 13 - 10 - 2000

### தலைமைக் காவலர் சிவதர்சினி

செல்வி:- சிவஞானம் சிவதர்சினி

ஆண்டுகள் நான்குஆடிச் சென்றதம்மா
தேடி வருவாய் எனத் தேய்ந்திருந்தோம் நீ வரவில்லை
பாடித் திரிந்த பூங்குயிலே
பரிதவிக்குதம்மா உன் பாசக் கூட்டில் பறவைகள்.

**13.10.2000 அன்று பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.**

மங்கை குடியிருப்பு,
மல்லாவி.

(5170)

பெற்றோர்,
சோதரர்.



## அறிவித்தல்

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட க.பொ.த.உ.தரம் கல்வி கற்றுள்ள மாணவர்களில் ஜீ.ஏ.கியு.(G,A.Q) கற்கை நெறியில் கல்வி பயில்வதற்குத் தகைமையுடைய மாணவர்கள் அனைவரையும் தங்களது சுய விபரத்துடன் நேரடியாக பிரதேச செயலகத்துடனோ அல்லது தங்கள் பகுதிக் கிராமசேவை அலுவலரிடமோ உடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்டப்படிப்பின் கற்கை நெறிக்கு பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 2004.10.29 ஆகும். இதற்கான விண்ணப்பம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மா.சிறிஸ்கந்தகுமார்,
பிரதேச செயலர்,
பூநகரி

(சி.10266)


## வழக்கை முடக்க ஜெயலலிதா புதியதிட்டம்

பெங்களூர் நீதிமன்றில் சொத்துக் குவிப்பு வழக்கை முடக்க புதிய திட்டமாக உச்சநீதிமன்றத்தில் இன்னொரு மனுத்தாக்கல் செய்ய ஜெயலலிதா முடிவு செய்துள்ளார்.

ஜெயலலிதா ஐதராபாத்தில் உள்ள திராட்சைத் தோட்டத்தில் தங்கி, கர்நாடக நீதிமன்றத்தில் விரைவில் தனக்கு எதிராக நடைபெறவுள்ள சொத்துக் குவிப்பு வழக்கு விசாராணையை எப்படித் தடுப்பது என்பது குறித்து, சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறராம் இதற்காகத்தான அவர் அவசரமாக ஐதராபாத் சென்றாராம். சில மாதங்களுக்கு முன் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த ஜெயலலிதா இனிமேல் நான் ஐதராபாத் செல்ல மாட்டேன். அங்கு வருவது பாதுகப்பற்றது என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

சொத்துக் குவிப்பு வழக்குக் குறித்து ஆலோசிப்பதற்காக பிரபல சட்டநிபுணர்கள் 2 பேர் டில்லியில் இருந்து வந்து ஜெயலலிதாவைக் தனித்தனியாகச் சந்தித்து நீண்ட நேரம் ஆலோசனைகளை நடத்தினார்களாம். விசாரணையைத் தாமதப்படுத்தும் வகையில் சுப்ரீம் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்வது குறித்து அவர்கள் ஆலோசித்து முடிவுகள் எடுத்தாகக் கூறப்படுகின்றது. அதன் படி மனு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்தப் பணிகள் முடிந்த பிறகு வருகிற 7ஆம் திகதி ஜெயலலிதா சென்னை திரும்புவார் என்றும் கூறப்படுகிறது.

# ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினரால் இரு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரின் யூரியில் நேற்றுக் காலை 2 தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ராப்பூர் என்னும் கிராமத்தில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரை தீவிரவாதிகள் தாக்கியபோது இந்த மோதல் ஏற்பட்டதாகப் பாதுகாப்பமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

2ஏ.கே.ரக துப்பாக்கிகள், ஆயுதங்கள்,மற்றும் வெடிபொருட்களும் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## "பெயர் மாற்றம்"

அருணாசலம் கனகசுந்தரி. கனகாம்பிக்கைக்குளம், திருவையாறு, கிளிநொச்சி என்ற மேற்படி முகவரியில் வசித்து வருகின்ற நான் 01.11.2004 இல் இருந்து எனது பெயரை அருணாசலம் சுபாஜினி என்று பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:-
அ.கனகசுந்தரி.


(4925)



## 3ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

### ஈழத்தில் பிறந்து லண்டனில் உதிர்ந்த...

தாயின் கையில் தவழ்ந்தது 22 - 07 - 1972



ஆண்டவனிடம் அடைந்தது 13 - 10 - 2001

சின்னத்துரை சரஸ்வதி தம்பதிகளின் ஏக புதல்வன் செல்வன் ஜெயமோகன்

### மோகன்

மூன்றாண்டு சென்றதையா...
சிந்தை தெளியவில்லை மௌனம் கலையவில்லை,
கண்ணியத்தில் கபடமின்றி ஏன்தானோ இரவில் சென்றாய்,
அலையாக வந்ததடா உன் மரணச் செய்தி அன்று
"உயிரே" உனக்கு என்ன நடந்தது ஏது
நடந்தது என உறவுகள் ஏங்கியே வினாவ
கார்மீதுவந்த காலனவனின் சதியன்று வதியானதோ
பதறி துடிக்குதடா எம் உள்ளம்-அழுகை
எதற்காக? இவை அழுகைக்கு அப்பாற்பட்ட சோகம்.

கலவெட்டித்திடல்,
புளியம்பொக்கணை,
பரந்தன்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(5173)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1948.02.19

விண்ணில் 2004.08.30

### நடராச்சா தருமராசா

வசாவிளான் - யாழ்ப்பாணம்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 13.10.2004 புதன்கிழமை மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
உத்தமன்,
(மகன்)

இல:-460,7 ஆம் யுனிற்,
இராமநாதபுரம்.

(5175)

# அவுஸ்திரேலியாவின் அணித் தலைவராக பிரகாசிக்கும்

# எண்ணமோ இல்ட்சியமோ எனக்கு சிறிதும் கிடையாது

அவுஸ்திரேலியாவின் தற்போதைய அணித் தலைவராக இந்திய சுற்றுப் போட்டியில் கடமை யாற்றிவரும் அடம் கில்கிறிஸ்ட் தொடர்ந்து அணித் தலைவர் பதவி வகிக்க வேண்டும் என்ற இலட்சியம் தனக்கு இல்லை எனச் சுட்டிக்காட்டி யுள்ளார்.

தொடர்ச்சியாக ரிக்கி பொண்டிங்கை அடுத்து தனக்கு தான் பதவி வேண்டும் அல்லது தான் ஒரு அணித் தலைவராக வரவேண்டும் என்ற எண்ணத்துடன் தான் கடமையாற்றி வருகின்றேன் என்று ஒருவரும் நினைத்துவிடாதீர்கள். நான் அப்படிப்பட்டவன் அல்ல. அப்படி நினைத்துக் கொண்டும் விளையாடவில்லை. எனக்கு உண் மையிலேயே அணித் தலைவர் பதவி என்பது ஒரு சுமைபோல்தான் கருதுகின்றேன்.


ரிக்கி பொண்டிங் இல்லாத வேளை அதை என்னுடைய பணியாக ஏற்று செவ்வனே செய்து முடிப்பது வேறுவிடயம்.

ஆனால், அணித் தலைவராக வரவேண்டும். அவுஸ்திரேலியாவின் அணித்தலைவராக பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணமோ அல்லது இலட்சியமோ தனக்கு இல்லை என கில்கிறிஸ்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

நான்கு தடவைகள் அவுஸ்திரேலியாவுக்கு அணித் தலைவராக கடமையாற்றியுள்ளார். இதுவரை விளையாடி 57 டெஸ்ட் போட்டியில் என்பது குறிப்பிடத்தக்கது.

அது மாத்திரமல்லாது 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் தொடக்கம் அணியின் உபதலைவராக பதவி யேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடம் கில்கிறிஸ்ட்




## ஸ்கொட்லாந்தின் சல்ரயரஸ் அணியில் ஜெயசூரிய விளையாடச் சம்மதம்



ஸ்கொட்லாந்தின் சல்ரயரஸ் (saltires) கழகத்துக்காக விளையாட சிறிலங்காவின் பிரபல கிரிக்கெட்வீரரான சனத் ஜெயசூரிய விருப்பம் தெரிவித்துள்ளார். சல்ரயரஸ் அணித் தலைவர் கிரேய்ட் ரைட் தனது கழகத்தின் 3ஆவது பருவகால போட்டிகளில் இணைக்க ஜெயசூரியவிடம் பேச்சுக்கள் நடைபெறுவதாக உறுதியளித்தார். இங்கிலாந்து மண்ணில் இதுவரை கழகங்களுக்காக ஆடவில்லை என்று கூறிய ஜெயசூரிய இந்த வாய்ப்பு தனக்கு புதிய அனுபவத்தைத் தரும் என்று தெரிவித்துள்ளார்.

ஜெயசூரிய 1997 ஆம் ஆண்டு இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் போட்டியில் S.S.C மைதானத்தில் 340 ஓட்டங்களைப் பெற்றார்.

## அடுத்தவாரம் நடைபெறும் ஐ.சி.சியுடனான சந்திப்பில் இனவாத குற்றச்சாட்டுக்கு விடைகிடைக்கும்



பாகிஸ்தானில் அடுத்த வாரம் நடை பெறவிருக்கும் .ஐ.சி.சியுடனான சந்திப்பின் போது சிம்பாப்வே கிரிக்கெட் சபை இனவாதத்தைக் கடைப் பிடிப்பதென்ற குற்றச்சாட்டுக்கு விடைகிடைத்துவிடும் என நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 7, மாதங்களாக சிம்பாப்வேயின் முக்கிய வீரர்கள் போட்டிகளில் பங்கெடுக்காதுள்ளமை அறிந்ததே. இது தொடர்பான விசாரணை முன்னர் நடைபெறவிருந்த போதும் அது பிற்போடப்பட்டுவந்துள்ளது.

இந்த விசாரணையை நடத்தி முடித்து அறிக்கையொன்றை விரைவில் வெளியிட தென்ஆபிரிக்க நீதிபதி ஸ்ரீவன் மஜிட்டும் இந்தியாவின் சொலிசிட்டர் ஜெனரல் குலாம் வகான்வதி ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

## போட்டிகளில் பங்கேற்க கென்ய அணி மறுப்பு

கடந்த வாரம் நமிபியாவுடன் நடைபெறவிருந்த சர்வதேச போட்டியை பகிஷ்கரித்த கென்ய கிரிக்கெட் அணியினர் தமக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவை பரிசுத் தொகை வழங்கப்படாவிட்டால் போட்டிகளில் விளையாட மறுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் அணித் தலைவர் ஸ்ரீவ் டிக்காலோ நிலுவையைக் கணக்கிட்டு வழங்குமாறு கோரியுள்ளார். அவர்களுக்கு கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் அரையிறுதியில் பங்கேற்றதற்காக 4ஆயிரம் டொலர் வழங்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரட்மன் காலத்து கிரிக்கெட் வீரர் கெய்த் மில்லர் காலமானார்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகல துறை வீரர் கெய்த் மில்லர் நேற்று முன் தினம் காலமானார்.

1948ஆம்ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணம்மேற்கொண்ட பிரட்மனின் தலைமையிலான போட்டியின் வெற்றிக்கு இவர் காரணமாயிருந்தார் இவர் 55டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 2,958ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன், இவரது சராசரி 37ஆகும். இவர் 170 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவரும் இவரது சகாவான வேகப்பந்து வீச்சாளரான ரேலின்ட்வோல் உடன் இணைந்து பெறுமதிமிக்க இணைப்பாட்டம் ஒன்றைச் செய்திருந்தார். அத்துடன் இவர் 50உள்ளூர் உதைபந்தாட்டப்போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார். இவர் இரண்டாம் உலகப்போரின் போராளியாக இருந்து மனைவி மேரியால் காப்பாற்றப்பட்டார். இரண்டாம் உலகப்போரின் பின்னர் அவுஸ்திரேலியாவில் மீண்டும் கிரிக்கெட் வளர்ச்சியடைய இவர் முக்கிய காரணமாக இருந்ததாக கிரிக்கெட்சபைத்தலைவர் பொப் மொரிமேன் தெரிவித்துள்ளார். ஆட்டங்களின் போது துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் பிடிகளை எடுப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு ஒரு கொடை என்றார். தனிப்பட்டமுறையிலும் மிக தெரிந்த அவர் உலக கிரிக்கெட் ரசிகர்கள் அனைவராலும் விரும்பப்பட்டவராவர். அவர் கடந்த பெப்ரவரி மாதம் மல்போனில் நிறுவப்பட்டிருந்த தனது சிலைத்திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

## அடுத்த உலகக்கிண்ண கால்பந்து போட்டிக்கு வேய்ன் றூணியின் பின்னால் இங்கிலாந்து



EMPICS

இங்கிலாந்து கால்பந்தாட்டக் குழு வேய்ன்றூணியின் பின்னால் வரும் உலக்கோப்பைப் போட்டியில் பங்கு கொள்ளவிருக்கிறது.

உலகக்கிண்ணத்தகுதிப்போட்டி ஒன்றில் ஹசர்பை ஜான் அணியை இங்கிலாந்து சந்திக்கவுள்ளது. சனிக்கிழமை நடந்த போட்டியொன்றில் வேல்ஸ் அணியை அது வென்றுள்ளது. அப்போட்டியில் றூணி தமது திறனை வெளிக்காட்டியுள்ளார்.

அவரது திறமைகளை அணிப் பயிற்றுனர் உட்பட வீரர்கள் அனைவருமே மிகவும் பாராட்டியுள்ளனர். துணிவானவீரர் என்றும் அவரோடு விளையாடுவது மகிழ்ச்சியை அளிக்கிறது என்றும் பவுல்ஸ் கூல்ஸ் தெரிவிக்கிறார்.

அணி தோல்வியைச் சந்திக்கும் என்ற நிலையில் அவர் திறமையுடன் ஆடிவெற்றியை ஈட்டித்தருவார் என அவர் தெரிவித்தார்.

வேல்ஸ் அணியின் கோல்காப்பாளர் கூறுகையில், அவர் வளர்ந்து வரும் வீரர் என்றும் பெறும் வெற்றிகள் அவருக்கும் குடும்பத்தினருக்கும் சென்றடையும் என்றார். இதற்கிடையில் அசர்பைஜன் அணியுடன் நடைபெறவுள்ள வேல்ஸ்அணி பங்குகொள்ளும் தகுதிப் போட்டிக்குத் தகுதியானவர்களை தயார் படுத்துமாறு எரிக்சன்னை லேம்பர்ட் கோரியுள்ளார்.

## தென்னாபிரிக்க அணியில் களையெடுப்பு நடத்தப்படும் அவ் அணியின் பயிற்சியாளர் எரிக் சைமன்




உள்ளூரில் நடைபெறவுள்ள போட்டிகளின் முடிவின் பின்னர் தென்னாபிரிக்க அணியில் களையெடுப்பு நடத்தலாம் என்றும் அவ்வணிக்குப் பயிற்சி வழங்கும் எரிக்சைமன் தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகளின் போது அணியில் யார் சிறப்பாகத்தனது திறமையை வெளிப்படுத்துகிறாரோ அடுத்து வரும் சர்வதேச போட்டிகளில் அவர் இணைத்துக் கொள்ளப்படுவதே அவருக்கு வழங்கும் பரிசாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். துடுப்பாட்ட வீரரோ, சுழற்பந்து வீச்சாளரோ, வேகப்பந்து வீச்சாளரோ அனைவருக்கும் இது பொருந்தும்.

தென்னாபிரிக்க அணியின் அடுத்த போட்டி நியூசிலாந்துடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தின் ரக்பி அணித் தலைவர் போட்டியின் போது காயமடைந்தார்



இங்கிலாந்தின் புதிய ரக்பி அணித்தலைவர் வில்கின்சன் சென்ற ஞாயிறு நடைபெற்ற போட்டி ஒன்றில் கையில் காய மடைந்துள்ளார்.


ஆயினும், அவர் இங்கிலாந்தின் பயிற்சிக்கு தடையேதும் ஏற்படுத்தமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நியூகேஸ்வரிலில் வாஸ்ப்ஸிவால் 29-43 என்ற அடிப்படையில் தோற்கடிக்கப்பட்ட போட்டியிலேயே இவர் காயமடைந்தார். ஆயினும், நிலைமை அபாயகரமானதாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

"காயமடைந்து ஐந்து நிமிடங்களின் பின் மருத்துவர் வந்து சிகிச்சை வழங்கினார். இதையடுத்து நிலைமை இயல்பானது" என வில்கின்சன் இணையத்தளம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடனான பயிற்சியில் முழுமையாகப் பங்குபற்றுவதில் இருந்தோ அடுத்த வார முடிவில் சரா சென்ஸ்சுக்கு எதிரான போட்டியில் எனது விளையாட்டையோ இது நிறுத்தப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.பல நிமிடங்களுக்கு கோஸ்வே அரங்கிலிருந்து விலகிச் சென்றிருந்த வில்கின்சன் கடந்த ஆண்டு உலகக் கோப்பை றக்பி போட்டியில் தான் அனுபவித்த கழுத்துக் காயம் போன்று மறுபடி நிகழ்ந்துவிடப் போகிறதோ என மிதமான அச்சத்தில் வருந்தினார் எனத்தெரிவிக்கப்படுகிறது.



## இந்தியா, அவுஸ். 2ஆவது டெஸ்ட் போட்டி நாளை சென்னையில் ஆரம்பம்



இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை சென்னை செப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.


இதற்காக இரு அணி வீரர்களும் சென்னை சென்றடைந்து மைதானத்தைப் பார்வையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே முதலாவது டெஸ்ட் போட்டியை வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி உற்சாகத்துடன் இப்போட்டியையும் வெற்றி கொள்ளும் ஆவலுடன் நாளைய போட்டியில் களமிறங்குகின்றது.

இந்தியா அணியைப் பொறுத்தவரை முதலாவது போட்டியை அவுஸ்திரேலிய அணியிடம் பறிகொடுத்துள்ள நிலையில் இப்போட்டியில் வெற்றி பெறவேண்டிய கட்டாய நிலையில் உள்ளது.

இந்த நிலையில், இப்போட்டியிலும் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் ஆடுவது சந்தேகத்திற்குரியதாக உள்ளதால் இந்தியா அணிக்கு பின்னடைவாகவே இப்போட்டியும் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிந்தனைக்கு



தமிழீழ பாட்டாளி வர்க்கமானது, ஒருபுறம் முதலாளித்துவ சுரண்டல் முறையையும் மறுபுறம் இனவாத ஒடுக்குமுறையையும் சந்தித்து நிற்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# சனாதிபதியின் ஆலோசனை

"நாட்டில் கல்வி, சுகாதாரம், பாதை, நீர்ப்பாசனம் என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன. இவற்றை உபயோகித்து கல்வி, சுகாதாரம் என்பனவற்றை மேம்படுத்தி கல்வியின் ஊடாக வேலைவாய்ப்பைப் பெற்று அதிகரிக்கும் பொருட்களின் விலையை செலுத்தத் தாயராக வேண்டும்" எனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதால் அவதியுறும் மக்கள் அவற்றில் இருந்து மீள்வதற்கான ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இதேசமயம் உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலையை அதிகரித்துச் செல்கையில் கடவுள் வந்தாலும் விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் எரிபொருளுக்கு அதிகரித்த மானியம் வழங்கப்படுமானால் அது பணவீக்கத்தை அதிகரித்துச் செல்லும் எனவும், இலவச உணவு நிவாரணம் போன்றவற்றை வழங்கமுடியாது எனவும் விலைவாசி ஏற்றத்திற்கான காரணத்தையும் விளக்கியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குறிப்பிடுவது போன்றுஅவர் கூறிய அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றதா? என்பது ஒரு புறம் இருக்க சனாதிபதி சந்திரிகா கூறுவது போன்று எரிபொருள விலை உயர்ந்தால் விலைவாசி ஏற்றம் கட்டுப்படுத்தப்பட முடியாது என்பதும் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே இருக்கலாம். இது கணிசமான மக்களுக்குப் புரிந்து கொள்ளக் கூடிய விடயமாகவும் இருக்கலாம்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தற்பொழுது கம்பகாவில் கூறியவற்றை ஒரு தேர்தல் பிரச்சாரத்தின்போது கூறுவாரா? நாட்டின் அரசியல், பொருளாதாரம் என்பவற்றின் யதார்த்த நிலையைக் கூறி வாக்குவேட்டையில் ஈடுபடுவாரா? அன்றி கடந்த பொதுத்தேர்தலிலாயினும் இதுபோன்ற சம்பவங்களை பிரஸ்தாபித்துள்ளாரா?.

தேர்தலின் போது மக்களுக்கு வாக்குறுதிகள் வாரி வழங்ககப்படுகின்றன. இலங்கையில் சுதந்திரத்தின் பின் காலத்துக்குக் காலம் நடைபெறும் தேர்தல்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்று விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்துவோம் என்பது. இதைத் தவிர மானியங்கள் வழங்கப்படும் என்பதும் இலவசமாக உணவு வழங்கப்படுமென்பதும் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்பதும் வழமையான வாக்குறுதிகளாக இருந்தன.

எக்காலத்திலும் எத்தகைய பொருளாதார நெருக்கடிகளையும் வேறு சவால்களையும் எதிர்கொண்டபோதும் இத்தகைய வாக்குறுதிகளை அரசியல் கட்சிகள் தவிர்த்துக் கொள்ளவில்லை. ஒன்றிற்கொன்று போட்டிபோட்டுக் கொண்டு வழங்கின. கடந்த தேர்தலிலும் இத்தகைய வாக்குறுதிகள் ஐ.ம.சு முன்னணியின் நிறம்பவே வழங்கப்பட்டன. தேர்தல் வாக்குறுதியில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவோம் என்பது முக்கியமானதாக இருந்தது.

ஆனால் இத்தனைக்கும் நாட்டின் பொருளாதார நிலை குறித்து அறியப்படாமல் இவ் வாக்குறுதிகள் வழங்கப்பட்டதாக இல்லை. நடைமுறையில் சாத்தியப்பாடற்றவை என்பதைத் தெரிந்து கொண்டே இவ் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக கடந்த தேர்தலின்போது ஐ.ம.சு முன்னணியினர் தாம் பதவிக்கு வந்தால் சதவீத சம்பளஉயர்வு வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தனர். ஆனால் அது நடைமுறையில் சாத்தியமற்றதொன்று என அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கவில்லை.

இதேவேளை சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்த போக்கைக் கொண்டதாகவே இருக்கும் என்பதற்கான சமிஞைகள் தெளிவாகவே தென்பட்டன. குறிப்பாக ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பும், ஈராக்கை அமெரிக்கத் துருப்புக்களிற்கு எதிரான போராட்டமும் எரிபொருளின் விலைஅதிகரித்த போக்கி லேயே இருக்கும் என்பதற்கான எச்சரிக்கை சமிக்ஞைகளாகவே இருந்தன.

ஆனால், தேர்தலில் வாக்குறுதி அளிக்கும் போது இத்தகைய காரணிகள் எவையும் கண்டுகொள்ளப்படவில்லை விலைவாசி ஏற்றத்தை அன்றைய அரசாங்கம் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்றே குற்றம் சாட்டப்பட்டது. வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைப் பற்றிக்கொண்ட பின்னர் பொருளாதார ரீதியிலான கோட்பாடுகளையும், தத்துவங்களையும் பேச முனைகின்றனர். மக்கள் விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என உபதேசம செய்கின்றனர்.

சனாதிபதி சந்திரிகா கொடுக்கும் விளக்கமானது முற்றிலும் சரியானதா? என்பது ஒரு புறம் இருக்க இத்தகைய விளக்கத்தைக் கொடுக்கச் சனாதிபதி சந்திரிகா முன்வந்துள்ளமையானது அவர் மக்களை எந்தமட்டத்தில் வைத்து நோக்குகின்றார். என்ற கேள்வியையே எழுப்புவதாகவுள்ளது.

அதாவது, போலியான வாக்குறுதிகளை வழங்குவதும், ஆட்சிக்குப் வந்தபின்னர் அவை நடைமுறைக்குச் சாத்தியமில்லை உங்கள் பாட்டை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் எனக் கூறுவதும் மக்களை மந்தைகளாக மதிப்பிடுவதே காரணமாகும். இது ஒரு முறையல்ல சகலகாலத்திற்கும் உள்ளது. இந்நிலையில் தான் ஒரு கேள்வி எழும்புகின்றது. பொதுவானதாகவே அரசியல் வாதிகள் எண்ணுவது சரியா? என்றுதவிர்க்கமுடியாது. ஏனெனில் ஒரு தடவை ஒரேவிடயத்தில் ஏமாற்றியவர்களை அதேவிடயத்தில் நம்பி மீண்டும் மீண்டும் மக்கள் வாக்களிக்கப்படுவதே காரணமாகும்.

### இந். படையால் படுகொலை செய்யப்பட்ட

# 40 பொதுமக்களின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

## இன்று யாழ். குடாநாடெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவிலில் உள்ள பிரம்படி வீதிப்பகுதியில் வைத்து 1987 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12,13 ஆம் திகதிகளில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 40 அப்பாவிப் பொது மக்களின் 17 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று யாழ். குடாநாடெங்கும் அனுஷ்டிக்கப் படுகிறது.

இந்நினைவு தினத்தின் விசேட நிகழ்வுகள் படுகொலை இடம் பெற்ற இடத்தில் அமைக்கப் பட்டுள்ள நினைவுத்தூபியில் இடம்பெறவுள்ளது.

அமைதிப்படை என்ற பெயரில் யாழ்.குடாநாட்டினுள் காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவத்தினரது வெறியாட்டங்களால் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட இம்மக்களது நினைவு அஞ்சலி நிகழ்வில் போராளிகள், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொள்வர். (33)

# திருமலை ஆர்ப்பாட்டத்தை இடைநிறுத்த திலக்ரணவிராஜா கோரிக்கை

(கொழும்பு)

திருகோணமலையில் இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தை இடைநிறுத்துமாறு மக்கள் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜா கோரியுள்ளார். வட-கிழக்கு சிங்கள அமைப்பிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புலிகளால் கைதுசெய்யப் பட்டுள்ள ஊர்காவற்படையினர் தொடர்பான பிரச்சினை தற்போது முடிவடையும் நிலையில் இருப்பதால் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை மேல்முறையீட்டு நீதிமன்றம் விடுதலைப்புலிகள் 07 பேருக்குப் பிணையில் செல்வதற்கான அனுமதி வழங்கியுள்ளது. ஆயினும் இவர்களுக்குப் பிணை நின்று அவர்களை விடுவிக்க இதுவரை யாரும் முன்வராத காரணத்தினாலும், மேலும் பல தரப்பட்ட காரணங்களினாலும் இவர்களை விடுவிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். ஆயினும் ஓரிரு தினங்களில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களென அவர் தெரிவித்துள்ளார்.

# அராலியில் வயிற்றோட்டம் குழந்தை ஒன்று மரணம்

யாழ். அராலிப்பகுதியில் வயிற்றோட்டம் அதிகமாகப் பரவிவருவதாகத் தெரியவந்துள்ளது. மேற்படிப் பகுதியில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் பேணப்படாமை என்பவற்றாலேயே இங்கு வயிற்றோட்டம் பரவி வருகிறது.

இவ்வயிற்றோட்ட நோய்க்கு இலக்காகி அராலி மத்தியைச் சேர்ந்த கபிலன் என்ற 4 மாதக் குழந்தை ஒன்று நேற்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. (33)

# விறகு ஏற்றிவந்த உந்துருளி பள்ளத்தில் பாய்ந்ததில் ஓட்டிவந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விறகு ஏற்றிக் கொண்டு வந்த உந்துருளி ஒன்று வீதியை விட்டு விலகிப் பள்ளத்தில் பாய்ந்ததில் அதனை ஓட்டி வந்தவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் யாழ் தீவகத்தில் உள்ள அல்லைப்பிட்டி இராணுவ சோதனைச் சாவடியை அண்மித்து இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஊர்காவல்துறை நாரந்தனையைச் சேர்ந்த வீ.மங்களேஸ் (வயது-36)என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

தீவகத்திலிருந்து உந்துருளியில் விறகை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்த பிரஸ்தாப நபரால் உந்துருளியை கட்டுப்படுத்தமுடியாமற் போயுள்ளதால் அது வீதி ஓரப் பள்ளத்தினுள் பாய்ந்துள்ளது. இதனையடுத்து அவர் ஏற்றிவந்த விறகுச்சுமை பிரஸ்தாப நபர் மீது சரிந்து கொண்டதால் அவர் அதனுள் நசுங்கி உயிரிழந்ததாகத் தெரியவருகிறது. (33)

# ஐ.ம.சு.மு.இன் மேல் மா.சபை உறுப்பினர் கொழும்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிசாந்த நாமல் குணவர்தன நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் கொள்ளுப்பிட்டி தர்மராஜ மாவத்தப் பதிப்பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த சம்பவம் இடம்பெற்று ஒரு மணித்தியாலத்துக்கு பின்னரே இது தொடர்பான தகவல் கொள்ளுப்பிட்டி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டதாக அறியவருகிறது. 35 வயதான இவர் ஒப்பந்த அடிப்படையிலேயே கைத்துப்பாக்கியால் சுடப்பட்டதாக தெரியவருகிறது. எனினும் இது தொடர்பாக மேலதிக தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

# வருடாந்தம் 30இல.அ.அட்டைகளை வழங்க ஆட்பதிவுத்திணைக்களம் முடிவு

(கொழும்பு)

ஒருவருடத்தில் 30 இலட்சம் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கான சகல ஆயத்தங்களையும் தற்பொழுது மேற்கொண்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் பி.பி அபேரத்ன தெரித்துள்ளார். இவைகளை வழங்குவதற்கு 35கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உடனடியாக தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்சமயம் சுமார் 2.3 மில்லியன் பேர் வரை அடையாள அட்டைகள் இன்றி இருப்பதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதில் பெரும்பாலானோர் வடக்கு கிழக்கை சேர்ந்தவர்களாவர், முன்னைய அரசாங்கம் ஒரு நாளில் அடையாள அடடையை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திய போதும் தற்சமயம் அது மூன்று நாட்களாக மாற்றப்பட்டுள்ளது. ஆவணங்களை உரிய முறையில் பரீட்சிப்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பொதுநலவாய அமைப்பின் பாராளுமன்ற பிரித்தானியக் குழு கொழும்பு விஜயம்

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பு பாராளுமன்ற பிரித்தானிய தூதுக்குழு ஒன்று பிரதமர் மகிந்தராஜபக்ஷவைச் சந்தித்துள்ளது.

இரு நாடுகளிலும் பாராளுமன்ற தேர்தல் முறைமைகள் குறித்து இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவிற்சர்லாந்தின் வெளியுறவு அமைச்சர் மக்கெலின் காமிரே நேற்று மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். சந்திப்பு அலரிமாளிகையில் இடம்பெற்றுள்ளது.

# பன்னிரு வேங்கைகள் மற்றும் 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளை முன்னிட்டு ஜேர்மனியில் எழுச்சி நிகழ்வு

## புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் சிறப்புரை

2ஆம் லெப்டினனட் மாலதி, லெப்டினன்ட் கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள், மேஜர் சுரேந்தி ஆகியோரின் நினைவு நாளை முன்னிட்டு ஜேர்மனியில் ஐந்து மாநிலங்களில் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

ஜேர்மனியின் பெர்லின் நகரிலும், சுட்காட் நகரிலும், ஹொற்றிங்ரன் நகரிலும், எஸன் நகரிலும் எழுச்சி நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

16ஆம் நாளன்று லென்டோ நகரிலும், 23ஆம் நாளன்று ஹுமஸ் பாக் நகரிலும் எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பெர்லின் நகரில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் அவர்களும், சுட்காட், எஸன் ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஜேர்மனியக் கிளை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் வசந்தி மனோகரனும், ஹொற்றிங்ரன் நகரில் முதலாவது மாவீரர் லெப். சங்கரின் சகோதரர் செல்வச்சந்திரன் சிறிதரனும் ஏற்றிவைத்தார்கள்.

பெர்லின், சுட்காட், எஸன் ஆகிய இடங்களில் தமிழீழத்திலிருந்து வருகை தந்திருந்த விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அத்துடன், பாலகுமாரன் அவர்கள் ஜெர்மனியக் கிளையின் மகளிர் அமைப்பின் இசைக்குழுவிற்கு மேஜர் பாரதி இசைக்குழு எனப் பெயர் சூட்டி, கலைஞர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

பாலகுமாரன் தனது, உரையில், தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும், ஜேர்மனி வாழ் தமிழ் மக்களுக்கு தேசியத் தலைவர் சொல்லிவிட்ட செய்தியையும், தாயகம் புலம்பெயர் மக்களிடம் எதிர்நோக்கும் தேவைகளையும் எடுத்துரைத்த அவர் சிறிலங்கா அரசாங்கம் சில கைக்கூலிகளூடாக எமது விடுதலைக்கு எதிராக செய்து வரும் பொய்ப்பிரச்சாரத்தைப் பற்றியும் தெளிவுபடுத்தினார்.

பெண்கள் அமைப்பினரால் இளம் பெண்களை இணைத்து உருவாக்கப்பட்ட இசைக்குழு முதல் முதலாக மேடையேறியது. அவர்கள் ஒரு மாதத்திற்கு குறைவான காலப் பகுதியிலேயே பயின்று மேடையேறினார்கள்.

பல எழுச்சி கானங்களை இணைந்து மக்கள் மனதைக் கவர்ந்து கொண்டார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கருணாகுழுவைச் சேர்ந்த ஐவர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றம்

பொலநறுவை வெலிக்கந்தப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தேச விரோதி கருணா குழுவைச் சேர்ந்த ஐவர் காயமடைந்திருந்தனர். இவ்வாறு காயமடைந்த ஐவரும் பொலநறுவை வைத்தியசாலையில் இருந்து கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலில் காயமடைந்த ஐவரும் சிகிச்சைக்காக பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு அவர்களுக்குப் பாதுகாப்பு போதாது என்பதனாலேயே இவர்களை கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்று மாற்றம் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (32)

# ஈ.என்.டி.எல்.எப். – கருணா கூட்டாகப் புதிய கட்சி?

கருணா குழுவும் ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பும் இணைந்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை அமைத்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ள நிலையில் அதனை முற்றாக மறுத்திருக்கின்றார். உதவித் தேர்தல் ஆணையாளர் அந்தக் கட்சி குறித்து செய்தி வெளியிட்ட இணையத்தளத்தின் தகவலின் படி கட்சியின் செயலாளராக ஞானேந்திரன் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இவர் பரந்தன் இராஜனின் சகோதரன் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தியப் படைகள் வடகிழக்கில் இருந்தபோது அவர்களுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பும் செயற்பட்டது. இந்த அமைப்பின் பரந்தன் இராஜன் உட்பட்டவர்கள் இந்தியப் படைகளுடன் சேர்ந்து இந்தியா சென்றிருந்தனர். தற்போது கருணாவின் தலைமையில் இந்தக் கட்சி அமைப்பதற்கான வேலைகளில் ஈடுபடுவதற்காகவும் இந்தியாவில் இருந்து பரந்தன் இராஜன் மற்றும் புளொட் மாமா, மனோமாஸ்ரர் உள்ளிட்ட தேச விரோதிகள் கொழும்புக்கு வந்திருப்பதாகவும் இவர்கள் ஆட்சியின் பணிகளை முன்னெடுக்கின்ற வேலைத்திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வெளியிட்டிருக்கும் இணையத்தளம் இதன் தலைவர் கருணா எனவும் தெரிவித்துள்ளது. இந்தத் தகவலின் உண்மை நிலைபற்றி உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும் தற்சமயம் தேர்தல் கண்காணிப்புப் பணிக்காக தமரோன் நாட்டுக்குச் சென்றிருக்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நாடு திரும்பிய பின்னர்தான் இதன் உண்மை நிலை தெரியவரும். (32)

### அரசு....

என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண சந்திரிகா அரசு மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு ஐ.தே. கட்சி ஆதரவளிக்குமென மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனை அவர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன் போது இலங்கை சமாதானச் செயற்பாடுகளில் எதிர் நோக்கப்படும் சவால்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர். இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இவர்கள் இருவரும் புதுடில்லியில் சந்தித்தபோது இது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாகவுள்ள விடயங்களை களைவது குறித்து இருவரும் கவனம் செலுத்தியுள்ளார். புதுடில்லியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இவர்கள் இருவரும் ஒரு மணித்தியாலயத்திற்கு மேல் பேச்சு வார்த்தை நடத்தியதாக எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வே முன்னாள் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க்கம் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

### நாட்டுப்.....

வீரச்சாவடைந்துள்ளார்.

சண்முகம்-ஜெயந்திரன் பெரிய தம்பிரான் கோவில் வீதி வந்தாறுமூலை மட்டக்களப்பு என்பவரே வீரச்சாவடைந்த வராவார். இவ்விருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### மீண்டும்....

அரசு பிரதிநிதிகளுடன் தற்போது ஐரோப்பாவில் தங்கியுள்ள தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து விரிவான பேச்சுக்கள் நடத்தினோம். அப்பேச்சுக்களின் விபரங்களை இங்கு சனாதிபதிக்கு எடுத்துரைத்தேன் என மேலும் தெரிவித்தார். விசேடமாக விடுதலைப்புலிகள் எதிர்காலப் பேச்சுக்கான அடிப்படைத் தொடர்பில் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய தயாரெனவும், புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி யோசனை விவாதத்திற்கு உட்படுத்தப்பட முடியாதவை அல்ல என்ற புலிகளின் செய்தியைச் சனாதிபதிக்கு எடுத்துக் கூறியதாகவும், புலிகள் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் தனது அரசுப் பிரதிநிதிகள் புலிகளுடனான கலந்துரையாடலின் போது பிழைகள் யாவும் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் விளக்கியதாக மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவர் சனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்தராஜபக்ஷ, எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (32)

### இல....

நடவடிக்கைகளில் அரசிற்கு ஆதரவு அளிக்கத்தயாராக இருப்பதாக அவர் அண்மையில் விடுத்த அறிக்கைகள் பற்றியும் என்னிடம் விளக்கினார் எனத்தெரிவித்தார்.

இந்திய தலைவர்களுடனான சந்திப்பின் போது நாங்கள் இலங்கை விவகாரங்கள் பற்றி இந்தியாவோடு தொடர்ந்து மேற்கொண்டு வரும் கருத்துப் பரிமாற்றங்கள் இதன்போது ஆராயப்பட்டது. தற்போது இலங்கையில் அதிகரித்து வருகின்ற வன்முறைகள், படுகொலைகள் பற்றி இரு தரப்பிலும் கவலைகள் தெரிவிக்கப்பட்டன. மேலும் அரசும் புலிகளும் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டுமென வலியுறுத்தப்பட்டதெனத் தெரிவித்தார்.

இலங்கைச் சமாதான முயற்சிகள் பற்றி இந்தியத்தரப்பில் ஏதாவது யோசனைகள் முன்வைக்கப்பட்டதா? என வினாவிய போது

இதுபோன்ற விவாதங்களின் போது யோசனைகள் பரிமாறிக் கொள்ளப்படுவது வழமை. ஆனால் அது பற்றிய விபரங்களை நான் உங்களிடம் பகிர்ந்துகொள்ள முடியாது. ஆனால் ஒன்றைச் சொல்லமுடியும். இந்தியாவும் நோர்வே அரசும் இலங்கையின் இரு தரப்பினரையும் பேச்சு வார்த்தை மேசைக்கு வரும்படி செய்யவேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றோம் என்றார். அத்துடன் இலங்கை விவகாரத்தில் நோர்வே நாட்டின் அனுசரணையாளர் பணியை இந்தியா தொடர்ந்து ஆதரித்து வருவதாகத் தெரிவித்த அவர் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும் இலங்கையுடனான அதன் நெருங்கிய உறவையும் கருத்திற் கொள்கின்ற வேளை இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் தனது பணியைப் பற்றி நோர்வே இந்தியாவிடம் வெளிப்படையாகவும், ஒழிவு, மறைவற்ற முறையிலும் கூறுவது இந்தியாவின் ஆலோசனையை கேட்டுப்பெறுவதும் அனுசரணையாளர் பணிக்கு அவசியமான நடவடிக்கைகள் எனத் தெரிவித்தார். சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டு 16 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் இலங்கையின் சமாதான முயற்சிகளில் இன்றைய யதார்த்த நிலை மிகவும் கவலை தருவதாகத் தெரிவித்தார்.

### அரசியல்....

வமாக அரசியல் விரிவுரைகளை ஆரம்பித்து வைத்தார்.

பின் நிருபர்களுடன் பேசிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு இனம் தான் வாழும் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் அது தன்நாட்டு அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்வது அவசியம்.

அத்துடன் அரசியல் விழிப்புணர்வு பெறும் ஒரு இனத்தால் மட்டுமே தனது உரிமைகளை நிலைநாட்டிதன் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து வாழ முடியும்.

அந்த அடிப்படையில் அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட சவால்களையும் எதிர்கொள்ளும் யாழ். குடாநாட்டு தமிழர்கள் அரசியல் சட்டம், சனநாயக உரிமை, மனித உரிமைகள் என்பன குறித்து பூரண அறிவைபெற்ற ஒரு சமுதாயமாகத் திகழ வேண்டும் என்பதற்காகவே ஜேர்மன் அரசியல் டிபபுளோமா நெறியை யாழில் ஆரம்பித்துள்ளது என்றார். (33)

### சீனாவிலிருந்து...

இராணுவத்தினரின் சாந்த கொட்டேகொடவின் அவசர வேண்டுகோளுக்கு இணங்க இக்கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் தொடர்பாக சனாதிபதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வெளிவிவகார அமைச்சர் முப்படைத்தளபதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதிஅமைச்சின் செயலாளர் உட்பட பலருடன் கலந்துரையாடியுள்ளனர். அடுத்த ஐந்து வருடங்களுக்குள் ஒவ்வொரு வருடமும் 19 டாங்கிகள் வீதம் 95 டாங்கிகள் தேவையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (32)




எமது விடுதலைப் போராட்டத்தின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் ஆன்மாவை உலுப்பிய சோக நினைவுகளைத் தாங்கி வெளிவந்துள்ள கவிஞர் ம.யாழ். ஆன்சிலின் எழுதிய கண்ணீர்ப் பயணங்கள்– பாகம் ஒன்று, பாகம் இரண்டு கவிதை நூல்கள்– தமிழர்கைகளில் தவழட்டும்– நூல் ஒன்றின் விலை–125 மட்டும். யாழ். நகரில் பிரபல புத்தகக்கடைகளில் கிடைக்கும்.

மனதாரப்– பாராட்டும், மிலேனியம் பெஷன் பொம்பே பஸார் நிறுவனத்தார் யாழ். நகரில் பிரபல புடவை மாளிகை ஆண், பெண், ஆடவர்,மகளிர், சிறுவர் வரை அனைவருக்கும் ஏற்ற ஆடைகளை தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளக் கைராசியான ஸ்தாபனம்.

என்றும் கவிஞரின் உற்ற நண்பன்,
–சதீஸ்–மலாயன் கபே ,யாழ்ப்பாணம்.




(சி.1057.3)


...ச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.